
மாலை : 49 மணி : 10 அக்டோபர் 2007 விலை ரூ. 10

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத் துறை வெளியீடு



நாமகிரி மஹாலக்ஷ்மி தாயார்


Buy fine gold from IOB
FINE GOLD WITH
999.9 PURITY
from
Indian Overseas Bank
Indian Overseas Bank
Good people to grow with
24 carat Fine gold imported from Switzerland
FINE GOLD
Fine Gold can be sourced in select branches across India
Available in 4,8,20,50 and 100gms.
Contact your nearest IOB branch for further details
इण्डियन ओवरसीज़ बैंक
Indian Overseas Bank
Good people to grow with
Toll Free: 1800 425 1230 (10 a.m to 5 p.m.)
www.iob.in



திருக்கோயில்

திருவள்ளுவர் ஆண்டு | ஆண்டு 2038 மணி 10 | ஸர்வஜித்-புரட்டாசி அக்டோபர் 2007

## அன்பார்ந்த வாசகப்பெருமக்களே!

மும்மூர்த்திகள், நான்மறைகள், ஐம்புலன்கள், அறுவகை சாத்திரங்கள், பன்னிரு திருமுறைகள், ஆழ்வார்கள் பன்னிருவர், இருபத்தி ஏழு நட்சத்திரங்கள் என்று வகுத்துள்ள நம் முன்னோர்கள் கலைகள் அறுபத்து நான்கு என வகுத்துத் தந்துள்ளனர். இக்கலைகளுக்கெல்லாம் தலைவியாக விளங்கும் கலைமகளை புரட்டாசித் திங்களில் வரும் நவராத்திரி நாட்களில் கொண்டாடி மகிழ்வோமாக.

"முருகு" என்றால் "அழகு" என்று பொருள். இயற்கையின் அழகே முருகப்பெருமான். இயற்கையே வடிவமாகக் கொண்டு திகழ்ந்தாலும், முருகப்பெருமான் தத்துவம் கடந்த தனிப்பரம் பொருளாக விளங்குகின்றான். "சரவணபவ" என்னும் திருமந்திரம் அவனுக்கு உரியதாகும். அதனை அன்புடன் ஓதுபவர் நினைத்ததெல்லாம் பெற்று மகிழ்வர் என்று இயற்கைப் பொருள்களில் இயைந்திருக்கும் முருகப்பெருமானின் இயல்புகளைத் தொகுத்து "அழகுத் தெய்வம் ஆறுமுகன்" எனும் தலைப்பில் வழங்கியுள்ளார் டாக்டர் திருமதி. இராதா தியாகராஜன் அவர்கள்.

உண்மையான பக்தியுடன் பகவான் திருவடிகளில் சரணடைவது ஒன்றே வீடு பேறு அடைவதற்கு உரிய வழி என்பதை ஆழ்வார்கள் அருளிச் செய்துள்ள பாசுரங்களின் மூலம் பகர்ந்துள்ளார் டாக்டர் எஸ். ஈஸ்வரன் அவர்கள்.

அருளாளர் அப்பர் அடிகளின் சிறப்புகளை விரிவாகவும், ஆழமாகவும், ஆய்வு செய்து சிறப்பானதொரு ஆய்வுக்கட்டுரை வழங்கியுள்ளார் பொறியாளர் திரு. எம். குப்புசாமி அவர்கள்.

ஆழ்ந்த பக்தி கொண்டு ஆதிமூலனை வணங்கினால் அழைத்தவுடன் அவன் வந்து ஆதரவு தருவான் என்பதை "கஜேந்திராழ்வாருக்கு" அருள்புரிந்த தன்மையின் மூலம் "கஜேந்திராழ்வார்" எனும் தலைப்பில் சிறப்பாக வடித்துத் தந்துள்ளார் முனைவர் ஏ. பரந்தாம ராமானுஜதாசன் அவர்கள்.

கோவில்பட்டி அருள்மிகு பூவனநாதசுவாமி திருக்கோயில் சிறப்புகளும், குன்றத்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி சிறப்புகளும், ஓங்கார ஷேத்திரம் எனவும், அஷ்டாங்க விமானத்துடன், வற்றாத வங்கக் கடலே சமுத்திர புஷ்கரணியாகவும் கொண்டு, அஷ்டலட்சுமிகளுடன் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சென்னை, பெசன்ட் நகர், அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயில் சிறப்புகளும் இவ்விதழில் திருத்தல உலாவாக வெளிவந்துள்ளன.

எழிலார்ந்த சிற்பங்கள் கொண்டதும் முதலாம் இராஜராஜ சோழனால் எழுப்பப்பட்ட கற்றளிக்கோயிலுமான சிவபுரம் சிவாலயத்தின் தொன்மை வரலாற்றினை வண்ணப்படங்களுடன் வழங்கியுள்ளார் பனையபுரம் அதியமான் அவர்கள்.

பதினோரு சிறப்புகளைக் கொண்டது பதினோராம் திருமுறை என, பதினோரு சிறப்புகளையும் ஆய்வு செய்து தனக்கே உரிய எளிய நடையில் "பதினோராம் திருமுறையின் பக்திப் பனுவல்கள்" எனும் தலைப்பில் தொகுத்தளித்துள்ளார் தமிழாகரர் தெ. முருகசாமி அவர்கள்.

செந்தமிழ் வாரிதி செல்வக்கணபதி அவர்களின் "சைவமும் தமிழும்" தொடரும், டாக்டர் சரசுவதி இராமநாதன் அவர்களின் "கந்தர் அனுபூதி" தொடரும் இவ்விதழில் வெளிவந்துள்ளன. திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் நினைவலைகளாக வெளிவந்த "கந்தபுராண நுண்பொருள்" இவ்விதழில் நிறைவு பெற்றுள்ளது. இறையோடு கலந்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஆன்மிகத் தென்றலை இனிவரும் சந்ததியினரும் தெரிந்து கொள்ளும் வகையில் அவர் வழங்கிய அருளுரை இனி வரும் இதழ்களிலும் தொடரும்.


அன்புள்ள

(கையொப்பம்)

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.,)
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர்

இந்து சமய அறநிலையத் துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை / 600 034.

# "இடுக்கண் அழியாமை"



மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் கலைஞர் அவர்கள்

நல்ல பாம்பு எனச் சொல்கிறோம் என்றாலும் கொடிய நஞ்சு கொண்ட பாம்பு அது! பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்ற பழமொழி அதனால் தானே பிறந்தது! அதனுடைய போக்கில் ஏதாவது தடை ஏற்பட்டால் அந்தத் தடை, தன்னை எதிர்ப்பதற்காகவே வந்த தடை என அது கருதிக்கொண்டு சீறிப்பாய்ந்து தன்னுடைய நச்சுப்பல்லை அழுத்திவிடும். அந்தப் பல்லின் ஊசி போன்ற துளையின் வழியாக நஞ்சு இறங்கி தாக்கப்பட்ட உடலின் உள்ளே சென்று குருதியை நஞ்சாக்கிக் கொன்றுவிடும். அப்படித் தாக்கப்பட்டது, ஒரு மிருகமாகவும் இருக்கலாம் அல்லது மனிதனாகவும் இருக்கலாம். பெரும்பாலும் தனக்கு ஒரு தடை வரும்போது தன்னைக் காத்துக் கொள்ளவே அது கடிக்கிறது. பூந்தோட்டத்தில் புல் தரையில் பஞ்சுப் பாதம்பட நடந்து செல்லும் பாவையொருத்தி, அவளையறியாமல் பாம்பொன்றை மிதித்துவிட்டால், உடன் அதனுடைய நச்சுப் பல்லுக்கு இரையாக நேரிடுகிறது.

என் அருமைத் தந்தை முத்துவேலரின் வாழ்க்கையில் நடைபெற்ற, ஒரு நிகழ்ச்சியைக் கூற விழைகிறேன். என்னைப்போலவே அவர் வாழ்விலும் துன்பங்கள் தொடர்கதைகளாக இருந்திருக்கின்றன. ஒருநாள் அவர் கிராமத்து ஓட்டு வில்லை வீட்டின் உள்ளே அமர்ந்து அமைதியாக ஏதோ பணியில் ஈடுபட்டிருக்கிறார். கிராமத்து வீடுகளில் வழக்கமாக இருக்கும் பரண் அவர் தலைக்கு மேல் இருந்திருக்கிறது. அதில்தானே வீட்டில் தட்டுமுட்டுச் சாமான்கள், பாய்கள், படுக்கைகள் எல்லாமே நிறைந்து கிடக்கும்.

அந்தப் பரணில் நெளிந்து கொண்டிருந்த நல்ல பாம்பொன்று எப்படியோ தவறிப்போய் ஒரு இடுக்கின் வழியாக கீழே விழுந்திருக்கிறது. விழுந்த பாம்பு நேராக தலையில் விழாமல் என் தந்தையின் தோள்மீது விழுந்திருக்கிறது. உடனே என் தந்தை கூச்சலிட்டு அலறிக் கையால் அந்தப் பாம்பைத் தூக்கி எறிய முனைந்திருப்பாரேயானால், பாம்பு தலையைத் தூக்கிப் படத்தை விரித்து இமைப்பொழுதில் அவர் உடலில் நஞ்சினை ஏற்றிவிட்டு ஓடியிருக்கும். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. தன் தோளில் பாம்பு விழுந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டார். அதே சமயம் பாம்பின் இயல்பையும் நினைவுபடுத்திக் கொண்டார். நாம் நம்மைக் காப்பாற்றிக்கொள்ளத் துடித்துத் துள்ளினால் அது கடித்துவிடும்: ஆகவே அமைதியாக இருப்பதே நல்லது என்ற முடிவுக்கு

வந்தார். பாம்பு தோள்மீது ஊர்ந்து கொண்டிருக்கிறதே என்ற அதிர்ச்சிக்கு இடம் தராமல் ஆடாமல் அசையாமல் அப்படியே சிலைபோல உட்கார்ந்திருந்தார். தோளில் இருந்த பாம்பு, மெல்ல அவர் தொடை வழியாக இறங்கிப் பிறகு தரையில் நெளிந்து அங்கிருந்து அகன்றுவிட்டது. இந்த நிகழ்ச்சியை என் தாயார் அஞ்சுகத்தம்மை அடிக்கடி சொல்லிக் கொண்டியிருப்பார்கள்.

எனவே நமக்கு எவ்வளவுதான் துன்பம், வெள்ளம்போல் வந்தாலும் அந்தத் துன்பத்தின் இயல்பு என்ன என்பதை உணர்ந்துகொண்டு செயல்பட்டால் அந்தத் துன்பம் நமக்குக் கேடு ஒன்றும் செய்யாது.

"அறிவுடைய ஒருவன் தனக்கு வரும் துன்பம் வெள்ளம்போல் அளவு கடந்ததாக இருந்தாலும் அவன் அந்தத் துன்பத்தின் இயல்பை நினைத்த அளவில் அத்துன்பத்தின் வேதனையிலிருந்து விடுபடுவான்" என்பது வள்ளுவர் வாக்கு! அதாவது துன்பத்தின் இயல்பை நாம் புரிந்து கொண்டால், அந்தத் துன்பம் தானே கெட்டுவிடுமாம்.

பாம்பின் இயல்பைப் புரிந்துகொண்டது மட்டுமல்ல. அதை நினைவிலும் கொண்டதால்தானே பாம்பினால் ஏற்பட இருந்த துன்பம் அகன்றது!

"வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்."

அதிகாரம் 63 இடுக்கண் அழியாமை பாடல் : 622

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின்
குறளோவியம் நூலிலிருந்து
நன்றியுடன் எடுத்து வெளியிடப்படுகிறது.

# இதழின் உள்ளே


1. அழகுத்தெய்வம் ஆறுமுகன்
டாக்டர் திருமதி. இராதா தியாகராசன் எம்.ஏ., பி.எச்டி., 5
2. ஆழ்வார்களின் சிந்தனைகள்
டாக்டர் எஸ். ஈஸ்வரன் எம்.ஏ., எம்.பில்., 7
3. அருளாளர் அப்பர் அடிகள்
திரு. எம். குப்புசாமி பி.இ., எம்.எஸ்., பொறியாளர் 11
4. கஜேந்திராழ்வார்
முனைவர் எ. பரந்தாம ராமாநுஜதாசன் 13
5. சிங்கர் குடியிருக்கும் சிங்கர்குடி
புதுப்பேட்டை வ. கோவிந்தன் எம்.ஏ., 18
6. சிவபுரம் சிவாலயம்
பனையபுரம் அதியமான் 20
7. குன்றத்தூர் அருள்மிகு
சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் 23
8. அருள்மிகு உமையம்மை
108 போற்றிகள் 24
9. கோவில்பட்டி
அருள்மிகு பூவனநாதசுவாமி 26
10. வேலும் மயிலும் துணை
டாக்டர். சரசுவதி இராமநாதன் 29
11. பதினோராம் திருமுறையின்
பக்திப் பனுவல்கள்
தமிழாகரர் தெ. முருகசாமி, புதுச்சேரி 31
12. சைவமும் தமிழும் - செந்தமிழ்வாரிதி
முனைவர் இரா. செல்வக்கணபதி 35
13. கந்தபுராண நுண்பொருள் - திருமுருக
கிருபானந்த வாரியார் சுவாமிகளின்
நினைவலைகள் 36
14. மங்களம் தரும் மகாலட்சுமி 37

# கலங்கி நின்ற இதயங்களுக்கு கரங்கொடுத்த கலைஞர்



நீண்ட காலமாக கருணை அடிப்படையில் பணி நியமனங்கள் வழங்கப்படாமல் இருந்து வந்ததை கருணையுடன் பரிசீலித்து மீண்டும் கருணை அடிப்படையில் நியமனங்கள் வழங்கிட உத்தரவிட்டு கலங்கி நின்ற இதயங்களுக்கு கரங்கொடுத்து உதவியுள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள்.







மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆணையின்படி, இந்து சமய அறநிலையத்துறையில் கருணை அடிப்படை நியமனத்திற்கு தகுதிபெற்ற பதினோரு பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் வழங்கினார். நிகழ்ச்சியின்போது தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. து. இராஜேந்திரன் இ.ஆ.ப. அவர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. த. பிச்சாண்டி இ.ஆ.ப. அவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



# "அழகுத் தெய்வம் ஆறுமுகன்"

குன்றுறையும் இடமெல்லாம் குளிர்ந்துறையும் குமரப் பெருமானாம் முருகனைக் கைதொழுது போற்றி வணங்கும் வழிபாட்டு முறை மிகமிகப் பழமை உடையதாகும். அவனைக் "குறிஞ்சி நிலக் கடவுள்" என்றும், "மலை கிழவோன்" என்றும் தமிழ் மக்கள் போற்றுவர் "சேயோன் மேய மைவரை உலகமும்" என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். மண்ணுலகில் உயரமாக விளங்குவது மலையாகும். அந்த மலைக்குரிய தெய்வம் முருகனாகும். உயர்ந்த பொருளை உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றிய நுட்பத்தைக் கண்டு மகிழலாம்.

உலகில் முதன் முதலில் மக்கள் நாகரிகத்துடன் வாழத் தொடங்கிய இடம் தமிழகத்து மலை நிலமேயாகும். மலையிலும், அதன் சாரலிலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் பேரழகுடன் விளங்கும் இயற்கை அழகை எவ்வாறு புகழ்வது? அந்த அழகைக் கண்டு மனமார அனுபவித்து மகிழ்ந்தனர் பழங்காலத் தமிழ் மக்கள். இவ்வாறு காலங் காலமாக அனுபவித்து வந்த காரணத்தால் இயற்கையில் உள்ள அழகின் நுட்பங்களை எல்லாம் அறிந்து மகிழ்ந்தனர். அளவிட முடியாத அழகுடன் மணமும், மாறாத இளமையும் என்றும் ஒரு தன்மையாய் உள்ள தெய்வத் தன்மையும் இயற்கையில் விளங்குவதைக் கண்டனர். இந்தச் சிறப்பை அவர்கள் முருகு (அழகு) என்று அழைத்தனர். தாங்கள் வழிபட்டு வந்த கடவுளிடத்தில் இயற்கை அழகெல்லாம் பொருந்தியிருப்பதைக் கண்டு அவனை அழகன் எனப் பொருள் தரும் முருகன் என்று அழைத்தனர்.



குன்றாத அழகும், குறையாத இளமையும், மனங் கவரும் மணமும் கடவுள் தன்மையும் பெறுவதே மக்கள் வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும். இயற்கையோடு பொருந்தி வாழ்ந்து, அதன் அழகிற்கு எல்லாம் ஆதாரமாக விளங்கும் முருகப் பெருமானை அன்போடு நினைத்து வழிபட்டு வந்தால் இவையனைத்தையும் பெறலாம் என்று சான்றோர் குறிப்பிட்டுள்ளனர்.

**"மணங் கமழ் தெய்வத் திள நலங் காட்டி**
**அஞ்ச லோம்புமதி, அறிவல்நின் வரவென**
**அன்புடை நன்மொழி அளைஇ விளிவின்று**
**இருள் நிற முந்நீர் வளைஇய உலகத்து**
**ஒரு நீயாகித் தோன்ற விழுமிய**
**பெறலரும் பரிசில் நல்குமதி"**

(திருமுருகாற்றுப்படை 290-95)

என முருகாற்றுப்படை ஆசிரியர், முருகனை வழிபட்ட அடியவனுக்கு, காட்சி தந்து, அஞ்சாதே என்று அபயம் கொடுத்து, உன் வரவு அறிவேன் என்று அன்பு மொழி கூறி, அழியாத கடல் சூழ் உலகத்தில் நீ வீடு பேறு பெறுவாய் எனப் பெறுதற்குரிய பரிசினை முருகன் தந்தருள்வான் என்று கூறுகின்றார்.

இயற்கையையும் இறைவனையும் ஒரே சமயத்தில் நினைத்துப் போற்றுவது நம் தமிழ் மரபாகும். திருஞான சம்பந்தர் தமது தேவாரத்தில் இறைவன் எழுந்தருளியுள்ள ஊரில் விளங்கும் இயற்கையின் அழகை எல்லாம் பாடியே



டாக்டர்
**திருமதி. இராதா தியாகராசன்,**
எம்.ஏ., பி.எச்.டி.,

இறைவனை ஏத்தியுள்ளார்.

**"நீலம் நெய்தல் தண்சுனை**
**சூழ்ந்த நீள்சோலைக்**
**கோல மஞ்ஞை பேடையோ**
**டாடும் குற்றாலம்**
**காலன் தன்னைக் காலால்**
**காய்ந்த கடவுள்ளெம்**
**சூல பாணி நன்னகர் போலுந்**
**தொழுவீர்காள்"**

(ஞானசம்பந்தர் - திருக்குற்றாலப்பதிகம் 7)

எங்கோ சென்று இறைவனைத் தேடாமல் இங்கேயே - நாம் வாழும் உலகத்திலேயே - மலையிலும், மலைச் சோலையிலும், தோகை விரித்து ஆடும் மயிலின் அழகிலும், மலையில் ஓடிவரும் அருவியிலும் வண்ண வண்ண மலர்களிலும், ஆறு, குளம், அலை வீசி ஆடும் கடல், ஆகாய வீதியில் தவழ்ந்து வரும் வெண்ணிலா ஆகியவற்றில் முருகனைக் கண்டு வணங்கலாம்.

முருகப் பெருமான் இயற்கைப் பொருள்களில் இயைந்திருக்கும் இயல்பினை முருகாற்றுப் படை ஆசிரியர் அழகுறத் தொகுத்துரைக்கும் பாங்கு அற்புதத் திறன் வாய்ந்தது.

**"ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்**
**ஆர்வல ரேத்த மேவரு நிலையினும்**
**வேலன் தைஇய வெறியயர் களனும்**
**காடும் காவும் கவின்பெறு துருத்தியும்**
**ஆறும் குளனும் வேறுபல் வைப்பும்**
**சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்**
**மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்**
**ஆண்டலைக் கொடியொடு மண்ணி அமைவர"**

(முருகாற்றுப்படை 220-27)

முருகன் தனது அழகை எல்லாம் நாம் இயற்கையில் கண்டு அனுபவிக்கும்படி தந்து கொண்டேயிருக்கின்றான். காலைப் பொழுதில் கடற்கரையில் நின்றால் அப்பொழுது உதயமாகும். சூரியன் அழகுமயிலின் மேல் ஆடிவரும் முருகனை நினைவூட்டுகின்றான். சூரியனைக் கண்டவுடன் உலகுயிரெல்லாம் மகிழ்கின்றன. அது போல முருகனைக் (அழகினைக்) காணும் அன்பர்கள் மிக்க மகிழ்ச்சி கொள்வதை நக்கீரர் திருமுருகாற்றுப்படையில்

**"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு**
**பலர் புகழ் ஞாயிறு கடல் கண்டாங்கு**
**ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி"**

(முருகாற்றுப் படை 1-3)

என கடல்மேல் எழுந்த கதிரவன் தோற்றமும், மயில் மீதெழுந்த முருகனின் தோற்றமும் இயைபு பட விளக்கிய அருமை கண்டு மகிழலாம்.

நக்கீரர் இயற்கையின் அழகைப் பார்த்துப் பார்த்து, அதில் இரண்டறக் கலந்து நின்றமையால் இயற்கையின் தோற்றத்தில் முருகனைத் தரிசிக்கிறார். நாமும் அவ்வாறே இயற்கையழகில் ஈடுபட்டு அதில் கலந்து விளங்கும் முருகனை,

**"................... என்றும்**
**இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே**
**உளையா யென்னுள்ளத் துறை"**

எனப் போற்றி வழிபட்டு வந்தால், அவன் அந்த இயற்கைக் காட்சியின் நடுவே நமக்குக் காட்சி தருவான்.

இவ்வாறு இயற்கையே வடிவமாகக் கொண்டு திகழ்ந்தாலும் முருகப் பெருமான் தத்துவம் கடந்த தனிப் பரம்பொருளாக - அகிலமெல்லாம் படைத்துக் காத்து அழிக்கும் முழுமுதற் பொருளாக விளங்குகின்றான் என்பதையும் தமிழர்கள் மறந்து விடவில்லை. "கந்தவேள்" ஞானமே வடிவமாக விளங்குகின்றான். ஞானசக்தியாகிய வடிவேலைக் கையில் ஏந்தி, கிரியா சக்தியாகிய தெய்வயானையாருடனும், இச்சா சக்தியாகிய வள்ளியம்மையாருடனும் காட்சி தந்தருளுகின்றான். ஆணவ மலமுதலிய அசுரப் படைகளை அழித்து நற்பண்புகளாகிய அமரர்களைக் காத்து அன்பர்களுக்கு நல்வாழ்வு அளிக்கின்றான். அறுகோடி மந்திரங்களில் மிக்க சிறப்புடைத்தாகிய "சரவணபவ" என்னும் திருமந்திரம் அவனுக்கு உரியதாகும். இதனை அன்புடன் ஓதுபவர் நினைத்தவெல்லாம் பெற்று மகிழ்வர்.



முருகன் அழகு பொலியத் தவக்கோலத்துடன் வீற்றிருக்கின்றான். அவனை மனமார வழிபடுபவர்களுக்கு எல்லா நலன்களும் வழங்கித் தனது அழகுத் திருக்காட்சியைத் தந்தருளுவான். இதனை அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில் அவன் திருவடிவக் காட்சியை விவரிக்கின்றார்.

**"திருவடியும் தண்டையும்**
**சிலம்பும் சிலம்பூடுவப்**
**பொருவடிவேலும் கடம்பும்**
**தடம்புயம் ஆறிரண்டும்**
**மருவடிவான வதனங்கள் ஆறும்**
**மலர்க் கண்களும்**
**குருவடிவாய் வந்து என் உள்ளம்**
**குளிரக்குதி கொண்டவே"**

(கந்தரலங்காரம்)

# ஆழ்வார்களின் சிந்தனைகள்

திருமாலின் பெருமைகளையும் பக்தி நெறியின் சிறப்பினையும் தாம் உணர்ந்து பிறர்க்கும் உணர்த்த முற்பட்ட ஆழ்வார்களின் பாசுரங்கள் திவ்வியப்பிரபந்தம் எனப்பட்டது.

**அருளிச்செயல் - விளக்கம்**

ஆழ்வார்களின் பாசுரங்கள் இந்த நிலவுலகில் மாந்தர்கட்கு மட்டுமின்றி ஏழு உலகங்களில் வாழ்பவர்கட்கும் பொருந்தும் என்கிறார் மணவாள மாமுனிகள்.

**"ஆழ்வார்கள் வாழி! அருளிச் செயல் வாழி!**
**தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி! ஏழ்வாரும்**
**உய்ய அவர்களுரைத்தவைகள் தாம் வாழி!**
**செய்யமறை தன்னுடனே சேர்ந்து"**

என்று போற்றித் துதிக்கிறார். இந்த அருளிச்செயலான ஆழ்வார் பாசுரங்களை நமக்குத் தொகுத்தளித்தவர் நாதமுனிகள். இக்கட்டுரையில் பன்னிரு ஆழ்வார்களின் நற்சிந்தனைகளைக் காணலாம்.

**திருக்காட்சி**



ஒளிமயமான திருக்கோலக் காட்சியினைப் பெருமிதத்தோடு **பேயாழ்வார்** பாடுகின்றார். இறைவன் அடியவர்பொருட்டு எடுத்துள்ள திருக்கோலத்தை வெறும் திருக்கோல அளவில் கருதாது பரம்பொருளாகக் கண்ட காட்சியே ஆழ்வாரின் உள்ளக் கிளர்ச்சிக்குக் காரணம் அப்பாடல்.

**"திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்**
**திகழும்**
**அருக்கன ணணிநிறமும் கண்டேன்"**

**கீதையின் கருத்து**

இட்டதெய்வமாக அடியவர்கள் எந்த உருவில் வழிபட்டாலும் திருமால் அருள் செய்வான். "என்னையார்" எந்த வடிவில் காண விரும்புகிறார்களோ அதே வடிவில் அவர்களுக்கு நான் காட்சியளிக்கிறேன் என்பது கீதை.

**தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே**
**தமருகந்த தெப்பேர்மற் றப்பேர் - தமருகந்து**
**எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே**
**அவ்வண்ணம் ஆழியா னாம்** (2125)

என்பது **பொய்கையாழ்வார்** அருளிச் செய்த பாசுரம். கீதையின் கருத்து இப்பாசுரத்தில் மிளிர்வதைக் காணலாம்.



**நீக்கமற நிற்றல்**

ஒவ்வொரு பொருளிலும் மறைந்திருப்பவன் இறைவன் என்பதை நம்மாழ்வார். **"பரந்ததண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்"** (2684) என்று விளக்குகின்றார். மேலும் **"மண்ணும் நீரு மெரியும்நல் வாயுவும் விண்ணு மாய்விரியு மெம்பிரான்"** (2775)



என்று வணங்குகின்றார். பக்தியுடன் தொழுதால் நம் எதிரில் நிற்பான். வணங்குகின்றவர்களுடைய கண்களிலே நிற்பான். எண்ணுமிடத்தில் வருவான் என்பது நம்மாழ்வார் கருத்து. கண்ணனாகிய எம்பெருமானைக் காண வல்லவர் யார்? எங்ஙனம் காணமுடியும் என்ற வினாவினை எழுப்பிய ஆழ்வார் அவன் எங்கும் பரந்திருக்கும் நிலையை


**"ஊண்பேசி லெல்லா வுலகுமோர் துற்றாற்றா**
**சேண்பால வீடா வுயிரோமற் றெப்பொருட்கும்**
**ஏண் பாலும் சோரான் பரந்துள்ளா மெங்குமே"**
(2871)

என்று பாடுகின்றார்.

**திருநாம மகிமை**

நச்சுவார் முன்னிற்கும் நாராயணன் நாமம் ஆயிரம் உடையவன். ஆயின் வைணவர்களைப் பெரிதும் கவர்ந்த திருநாமம் நாராயணா என்பது. இந்நாமம் இம்மை நலனும் மறுமை நலனும் தரவல்லது என்பதைக் குலம் தரும் எனத் தொடங்கும் பாடலில்,

**"நலந்தருஞ் சொல்லை நான் கண்டு**
**கொண்டேன்**
**நாராய ணாவென்னும் நாமம்"** (956)
என்று திருமங்கை மன்னன் உணர்த்துவார்.



திருமால் நமது கட்புலனுக்கு அகப்படாமல் வெகு தொலைவில் இருந்தாலும் அவனது திருநாமம் சொன்னால் அது நமக்கு அருகில் நின்று உதவும். இறைவன் கட்டிப் பொன் போன்றவன். அவனை, பக்தியோகம், ஞானயோகம் போன்றவற்றால் தான் அடையமுடியும். அவன் திருநாமமோ பணிப்பொன் (நகைப்பொன்) போன்றது. நமக்கு அருகில் நின்று உடனே உதவும்.

**திருநாமம் சொல்வதன் பயன்**

எம்பெருமானை அடைவதற்குக் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் போன்ற பல வழிகள் இருந்தபோதிலும் அவன் திருநாமம் சொல்வதாகிய நாமசங்கீர்த்தனம் என்பது எளியதும் சிறந்ததுமாகும். அதன் பலன்கள் அளவிடற்கரியன. நாராயணா என்னும் நாமத்தைச் சொன்னால் உணர்வெனும் பெரும்பதம் தெரியும். உய்யும் வழி அறியலாம். நற்பொருள் காணலாம். திருநாடு அடைய வழி அறியலாம் ஞானமாகிய குலத்தையும், கைங்கர்யமாகிய (தொண்டு) பெருஞ்செல்வத்தையும், பரமபதத்தையும் பேரானந்தத்தையும், பல நன்மைகளையும் அவரவர் விரும்பியதையும், பெற்ற தாய் தரும் உதவியை விடச் சிறந்த உதவிகளையும் பெறலாம், என்றும் முக்காலத் துன்பங்களும் தீரும் என்றும் ஆழ்வார்கள் அருளிச் செய்துள்ளனர். தன்பிள்ளையை நாராயணா என்று அழைத்தால் வீடுபேறு



கிடைக்கும் என்பதைப் **பெரியாழ்வாரின்** பாசுரங்களில் காணலாம். பெரியாழ்வார் திருமொழி நான்கில் உள்ள ஆறாம் பத்துப் பாடல்கள் இதனையே உணர்த்துவன. சான்றாக,

**"செம்பெருந் தாமரைக் கண்ணன்**
**பேரிட்டழைத்தக்கால்**
**நம்பிகாள் நாரணன் தம்மன்னை நரகம்புகாள்"**
(388)

என்ற பாசுரத்தைக் கூறலாம்.

**ஆண்டாள் வாக்கு**



ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி பாவை நோன்பிற்காக நாம் நீராடினோமானால் தீமையற்று நாடெல்லாம் மும்மாரிப் பெய்து வளம் பெருகும். நீங்காத செல்வங்கள் நிறைந்து வளம் கொழிக்கும் என்று ஆண்டாள் அருளிச் செய்கின்றாள். தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை தூமலர் தூவித் தொழுது, வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க, அறியாது செய்த பாவங்களும் இனி வரவிருக்கும் பாவங்களும் தீயிலிட்ட தூசுபோல அழிந்து விடும். எனவே மனத்தால், சொல்லால், செயலால் இறைவனையே பற்றி இருக்க வேண்டும் என்பது தெளிவு, மாமாயன், வைகுந்தன் என்று நாமம் பலவும் நவின்று பயன்பெற வேண்டும் என்பது ஆண்டாள் திருவாக்கு.

**பூதத்தார் நெறி**



பூதத்தாழ்வார் பாசுரங்களில் பகவானை ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன் நாமங்களைப் போற்றிக் கூறினால் வானத்தை ஆளும் அமரர்கள் ஆகலாம் என்பது தெரிகிறது. (2183)

**மதுரகவியின் மாண்பு**



நம்மாழ்வாரின் பெயரைக் கேட்டாலே நாவில் அமுதூறி நிற்கும் அளவுக்கு அவரிடம் தோய்ந்த உள்ளத்தவர் இவ்வாழ்வார். நம்மாழ்வார் பாடல்களில் பெரிதும் ஈடுபட்டு அவற்றைப் பாடித் திரிந்த அனுபவமே இவர் பாடல்களுக்குக் காரணமெனல் வேண்டும். இதனை, இவர்

**"நாவி னால் நவிற் றின்ப மெய்தினேன்**
**மேவி னேனவன் பொன்னடி மெய்ம்மையே**
**தேவு மற்றறி யேன்குரு கூர்நம்பி**
**பாவி னின்னிசை பாடித் திரிவனே"** (936)

என்கிறார்

இறைவனை அடைவதற்குப் பாட்டையே நெறியாகக் கூறும் வழக்கம் இப்பக்தி நெறியில் உண்டு. குருகூர் நம்பியின் பாடலைப் பாடுவதும் அவர்பால் கொண்ட பக்திமையால் மட்டும் அன்று. அவர் பாடல்கள் திருமால் பேற்றுக்கு இட்டுச் செல்லும் என்ற உறுதிப்பாடும் ஒரு காரணம்.

**"திரிதந்தாகிலும் தேவ பிரானுடை**
**கரிய கோலத் திருவுருக் காண்பன்நான்**
**பெரிய வண்குரு கூர்நகர் நம்பிகாள்**
**உரியனாய்அடி யேன் பெற்ற நன்மையே"**
(930)

நம்மாழ்வாரின் இனிய பாடல்களைப் பாடித் திரிந்தமையின் கண்ணபிரான் தரிசனம் கிடைத்தது. நம்மாழ்வாருக்கு அடிமையாகி நான் (மதுரகவியாழ்வார்) பெற்ற பரிசு இது என்பதே இப்பாடலின் கருத்து.



**சரணாகதி நெறி**

இறைவனிடம் தன்னை முழுவதுமாக ஒப்படைத்து அவனருள் பெறுவதே இந்நெறி. உன் சரணமே சரணம் என்றறிந்தேன் என்பதே சரணாகதியின் விளக்கமாக அமைகிறது. **"தருதுயரம் தடாயேலுன் சரணல்லால் சரணில்லை"** (688) என்று பாடிய **குலசேகரரும்** இந்நெறி நின்ற ஆழ்வார்களுள் குறிக்கத்தக்கவர்.



அரங்கனைத் தவிர வேறு எவரையும் பாடாது அவனுக்குத் தொண்டு செய்வதையே விரும்பிய தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச் செய்தது திருமாலை என்பது. திருமாலை அறியாதவர் திருமாலை அறியார் என்ற பழமொழி இப்பாசுரங்களின் பெருமையை உணர்த்தும். திருமாலை 29,30 ஆகிய இரு பாசுரங்களும் சரணாகதி நெறியை விளக்குவையாக அமைந்துள்ளன. அவை வருமாறு

**"ஊரிலேன் காணியில்லை உறவுமற்**
**றொருவரில்லை**
**பாரில் நின் பாதமூலம் பற்றிலேன் பரம மூர்த்தி**
**காரொளி வண்ணனே கண்ணனே**
**கதறுகின்றேன்**
**ஆருளர் களைக ணம்மா அரங்கமா நகரு**
**ளானே" (900)**

**"மனத்திலோர் தூய்மை யில்லை வாயிலோ**
**ரின்சொ லில்லை..**
**எனக்கினிக் கதியென் சொல்லாய் என்னையா**
**ளுடைய கோவே" (901)**

**திருவடி**

பிறவாமை வேண்டும் பெருந்தகையாளராகிய ஆழ்வார், 'பிறவிக்குக் காரணமான வினைகளை நீக்கியருளி இறைவன் தன் திருவடிகளைச் சேர்ந்து நிற்குமாறு செய்வது எக்காலமோ' என்று வையம் அளந்த வாமனனை வினவுகின்றார். இதிலிருந்து பிறவி, வினை போன்ற துன்பங்களைப் போக்கும் மாமருந்து திருவடி என்பது தெரிகிறது.

**"ஒயு மூப்புப் பிறப்பிறப் புப்பிணி**
**வீயு மாறுசெய் வான் திரு வேங்கடத்**
**தாயன், நாண்மல ராமடித் தாமரை**
**வாயுள் ளும்மனத் துள்ளும்வைப் பார்கட்கே"**
(2927)

என்னும் திருவாய்மொழிப் பாடல் விளக்குகிறது. வானவர் தம்மை ஆளும் இந்திரனும், நான்முகனும்

சடைமுடி அண்ணலும் ஆகிய மூவருமே அச்சுதனின் திருவடித் தாமரைகளைச் சிந்தித்து ஏத்தித் திரிகின்றனர் என்றால் அவன் திருவடிப் பெருமையை அளவிட்டு உரைக்க முடியுமோ?

உண்மையான பக்தியுடன் பகவான் திருவடிகளில் சரண்புகுவது ஒன்றே வீடு பேற்றிற்கு உரியவழி என்பது வலியுறுத்தப்பெறுகிறது. எம்பெருமானின் திருவடிகளை அடைகின்றவர்களுக்கு நல்ல ஞானம் பிறக்கும். அல்லல், அருவினை, பிணி, பிறவி ஆகியவை நீங்கும். இறைவன் திருவடி அடியார்களுக்கு நிழலாக இருந்தது அவனது திருவடிகளையே புகலடைந்தால் அவனருளால் பேரின்பம் கிட்டும் என்பதும் புலப்படுகிறது.

- டாக்டர். எஸ். ஈஸ்வரன், எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி., திருச்சிராப்பள்ளி



## எண்ணச்சிதறல்

அன்புடையீர்,

'திருக்கோயில்' செப்டம்பர் 2007 இதழில் 'மாணிக்கவாசகரின் பெருமையும், திருவாசகத்தின் சிறப்பும்' என்ற அடியேனின் கட்டுரையை வெளியிட்டுள்ளமைக்கு மிக்க நன்றி. நன்றி உணர்வு இருக்க, கட்டுரையை வெளியிட்ட பாங்கு மிகச் சிறப்பாக அமைந்து விட்டதில் அளவிலா மகிழ்ச்சி. நான்கு படங்கள் வெளியிட்டது கட்டுரையின் பயன்பாட்டைப் பன்மடங்காக்கிவிட்டது.

உலக உருண்டையைச் சுற்றி கட்டுரைத் தலைப்பை அமைத்தது திருமுறை ஆசிரியர்கள் இருபத்தி எழுவரில் சிறப்புமிக்கவரான மணிவாசகப்பெருமானின் அருள் உரைகளை கொண்ட திருவாசகம் என்ற நூல் அகில உலக சீவராசிகளுக்கும் உரிய ஒன்று என்ற உண்மையை - பேருண்மையை - விளக்குவதாக அமைந்து விட்டது.

இரண்டாவது படம் திருப்பெருந்துறையில் வாதவூரடிகள் ஆத்மநாதர் ஆலயத்தின் கட்டுமானப்பணிகளையும், சிற்பிகளின் சிற்ப உருவாக்கப் பணிகளையும் சித்தரிக்கிறது. இதில் வாதவூரடிகள், 'தென்னவன் பிரம்மராயர்' என்ற சிறப்புப் பட்டத்துடன், பாண்டி நாட்டு அரசவையில் தலைமை அமைச்சராக இருந்து சேனைகளுக்காக பரிசுகளை வாங்கும் அரசுப் பணிமேல் பயணித்தவர் திருக்கோயில் கட்டுமான திருப்பணிகளைப் பார்வையிடும் வகையில் இருப்பது கண் கொள்ளாக்காட்சி. அந்நாளைய பிரதம அமைச்சரின் கம்பீரம் தெரிகிறது. அதே சமயம், இவர் அன்றே சின்னாட்களில் சிவபெருமானின் திருவுபதேசத்தையும், திருவடித் தீக்கையும் பெற்று 'அடிகளாராக' மாறி திருவாசகத்தேனையும், திருக்கோவையாரையும் இந்த உலகம் உய்ய வழங்கவிருப்பவர் என்ற எண்ணம் தோன்றி உள்ளத்தை நெகிழ்விக்கிறது.

நரியை குதிரைப் பரியாக்கி நிகழ்வித்தது மூன்றாவது ஒவியத்தில் காணப்படுகிறது. இவை அனைத்தும் மிகச்சிறந்த பொருள் பொதிந்த ஒவியங்கள்.

சந்நிதியில் மாணிக்கவாசகப்பெருமானின் திருவுருவப்படம் நான்காவதாக அனைத்திற்கும் முத்தாய்ப்பாய் அமைந்துவிட்டது. திருக்கோயில் என்ற பெயருடன் தமிழரின் ஆன்மீக உலகில் வலம் வரும் இதழில் கோகழி ஆத்மநாதர் ஆலயக் கட்டுமானம் போன்ற படங்கள் வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்க Editorial Touch.

'திருக்கோயில்' இதழின் வாயிலாக இந்து சமய அறநிலையத்துறை ஆற்றி வரும் சமயப்பணியும் ஆன்மீக சேவையும் சிறப்புடன் தொடர எல்லாம்வல்ல முழு முதற்கடவுள் சிவபெருமானின் அருள் என்றும் நிலைத்திட விழைகிறேன்.

**- எம்.ஆர். சந்தானம்**


## திருக்கோயில்

### திங்கள் இதழ்

தனி இதழின் விலை ரூ. 10/-
ஓராண்டு சந்தா ரூ. 120/-
ஐந்தாண்டு சந்தா ரூ. 500/-
பத்து ஆண்டுச் சந்தா ரூ. 1000/-
ஆயுட்காலச் சந்தா ரூ. 1500/-
(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)



திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்

விளம்பரக் கட்டணம் விபரம்

| | |
|---|---|
| 1.பின்பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்) | ரூ. 15,000/- |
| 2.முன்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 10,000/- |
| 3.பின்பக்க அட்டை உட்புறம் (வண்ணத்தில்) | ரூ. 7,500/- |
| 4.உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 5,000/- |
| 5.உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 3,000/- |

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை

ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, 119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.

என்ற முகவரிக்கு அனுப்பவும்

சிவமயம்

# அருளாளர் அப்பர் அடிகள்

## திருச்சிற்றம்பலம்

அப்பர் அடிகள் வரலாற்றினை நாமனைவரும் ஒருவாறு அறிந்துள்ளோமாயினும், இப்பெருமானார் தம் சிறப்பியல்புகளை எல்லாம் இன்னும் விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது தெரிகின்றது அங்ஙனம் பார்க்கும்போது புதிய பல வியத்தகு செய்திகள் புலப்படுகின்றன. சமய குரவர் நால்வரினும், மூத்த அருளாளர் என்பதோடல்லாது, அஞ்சா நெஞ்சு கொண்டவராயும் குறைபாடுடைய புறச்சமயத்தார்களைக் கடிந்தொதுக்கியவராயும் திகழ்ந்தவர் அப்பர் என்று அவருடைய பாடல்கள் வாயிலாகவே தெரிகின்றோம். **"நாமார்க்கும் குடியல்லோம்"** என வரும் பாடல் காண்க. அப்பரின் ஆயிரக்கணக்கான பாடல்களுள், இந்த ஒரே ஒரு பாடலிற்றான் 'ஓம்', 'ஓம்' எனுமோசை மீண்டும், மீண்டும் ஒலிக்கின்றது. அப்பர் பிரானொடுங் கூடியிருந்த அடியார்கள் மிகப்பலர் என்பது குறித்து இவ்வாறு பாடினாரோ, அரசனுக்கும் அஞ்சாத நெஞ்சினர் எனக்காட்டுமுகத்தானே இங்ஙனம் சொற்றனரோ, அன்றி ஓங்கார ஒலியை அமைத்து இதனைச் செய்தனரோ, தெரிகின்றிலம். சிவபெருமானே முழு முதற்கடவுள், பிறப்பிலி, இறப்பிலி என்று முழங்கியவர். அன்றியும், அவர் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறிவழி நின்று காட்டி நம்மோரை மேல் நிலைக்கு ஈர்த்துச் செல்லுதற்குப் படிப்படியாக வகை செய்துள்ளார் என்றும் தெரிகின்றது. பல சிவனடியார்கள், நால்வகைப்படி நிலைகளில் யாதானுமொன்றை விளக்க வந்தாராக, அப்பர்பிரான் இந்நான்கினையும் மக்கள் எல்லோரும் ஒவ்வொன்றாகக் கைக்கொண்டு ஒழுகும் வகை செய்துள்ளமைக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.



அப்பர் அருளிச்செய்த பாடல்களெல்லாம் இலக்கண அமைதியுடையனவாகத் திகழ்தலும் கண்டாமன்றே. இப்பாடல்களெல்லாம் பிற்காலத்தில் பண்ணிசை வரிசையிலோ, தல வரிசையிலோ, வரலாற்று வரிசையிலோ அமைக்கப் பெற்றனவாதலால், வரலாற்று வரிசையில் பார்க்கும் ஞான்று சிற்சில வேறுபாடுகள் தோன்றுதல் கூடும்.

எடுத்துக்காட்டு **தீருவீரட்டானம் : (1) (சலம்பூவொடு தூபம்)**
**திருஎறும்பியூர் : (2) "சற்றும் நினைந்தேனில்லை.**
என்கின்றனர்.

மேலும், சூலைநோயுற்றதால்தான் அவர் சைவம் திரும்பினார் எனக்கோடல் மரபு. எனினும் இதுவும் ஆய்வு செய்தற்குரியதே. பேரறிஞரும் பழுத்த சிவப்பழமுமாகிய அப்பர், சமணர் தம் சூதினால்தான் நோயுற்றார் என்றும் அதற்கு முன்பே அன்றைய காலச்சமணர்தம் நடைமுறை சரியில்லாமையைக் கண்டு அங்கிருந்து விலகினார் என்றும் கூறுவாருமுளர். **'ஒன்றியிருந்து நினைமின்கள்", வாய்த்தது ஈதோர் பிறவி'** எனும் பாடல்களையும் நினைந்து ஆய்தல் வேண்டும்.

**"அடியார் உறவும் அருள்நெறிக் கூட்டத்தவர் துணையும், கடிசேர் அடிமலர்க் காட்சியும் அன்றி மற்றுண்டு கொல்லோ, தடியாலடியுண்ட மட்கல. மொக்கத்தகரு மிந்தச், செடிசேர்புழுவுடல் சாயா திருந்திடச் செய்வதற்கே" -**
(அண்மைக் காலத்துப் பாடலொன்று)

அப்பர் என்றாலே உழவாரப் பணிதான் முன்னின்று தோன்றுகிறது. "உழவாரப் படை தோன்றும்" என்னும் பாடல் நோக்குக.

இன்னுமோர் செய்தி :

(இராவணன் பற்றியது) : அடியார் பலரும் இலங்கைக்கோன் இராவணனைக் கண்டித்தாரேனும், அவன் சிவபெருமான் மீது கொண்டிருந்த பெரும் பற்றினைப் பாராட்டியேயுள்ளனர். இராவணன் மேலது நீறு என்கின்றார் ஞானசம்பந்தர்.

திரிசடைக்கருளிய விரிசடைக்கடவுள்: இருங்கடல் இலங்கை வேந்தன் சாமவேதம் பாடி உய்ந்த வரலாறு - அறம் நானூறு (பாடல் 3)

இராவணன் :

**"பொறித்தேர் நிறுத்திய**
**கல்பொர முயன்ற**
**இருங்கடலிலங் கைவேந்தன்**
**உரங்கெட இரங்கி வரங்கொடுத்தவற்கே"**

**ஒன்றே குலம் ஒருவனே தேவன் :**

**"வாய்த்தது நந்தமக்கீதோர் பிறவி"**
**"கோத்திரம் பல பேசும் சழக்கர்காள்" -**
**கோத்திரத்தானும் குலத்தினாற்றானும்**
**குவலயத்துச் சாத்திரத்தானுநாஞ் சாதித்த**
**தென்கெலோ**
**கங்கை ஆடிலென்?**
**காவிரியாடிலென்?**
**செத்துப் பிறக்கின்ற தேவர்!!**

இவற்றையெல்லாம் விளக்கி உண்மை நிலையினைச் செவ்வனே எடுத்தோதல், இக்காலத்தில் இன்றியமையாததாகின்றது.

**Vide : மனப்பாறை கட்கேறுமோ?**
**நடலைவாழ்வு கொண்டென் செய்திர்?**
**எனுவரூஉம் அப்பர் தேவாரமும்காண்க**

மேலை நாட்டார் பலரும் "ஒருவனே தேவன்" என்னும் கொள்கையே சிவநெறிக் கருத்தாகும் என்று அறியாது, பல் கடவுட் சமயம் இதுவாகுமென்று பிழைபடப்பேசா நிற்றலும் கண்டாமன்றே. இதுபற்றி உலகெங்கும் தெளிவுரை செய்து பரவுதல் வேண்டும்.

**இனி இலக்கிய நயம் :**

தாண்டகம் : அரியானை.... உழவாரப்படை..... (காய்ச்சீர் காய்ச்சீர் மாச்சீர் மாச்சீர் காய்ச்சீர் காய்ச்சீர் மாச்சீர் மாச்சீர் என்ற சீரமைப்பில் வருவது

**கலித்துறை : மண்டபாதலம்புக்கு மால்கடல் மூடி**
**திண்பால் நமக்கொன்று:......... கண்பாவு**
**நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே**
**கோத்திரத்தானும்........... விருத்தம் etc.........**
**"இரப்பவர்க் கீய வைத்தார்**
**ஈபவர்கருளும் வைத்தார்**
**கரப்பவர் தங்கட்கெல்லாம்**
**கடு நரகங்கள் வைத்தார்"**
**"அஹிம்சை.............? ஒல்லும் வகையான்**
**உற்றநோய் நோன்றல், உயிர்க்கு உறுகண்**
**செய்யாமை"**

இனி :

**அப்பர் பாடலில்**
**நகைச்சுவை :**

அருளாளராகிய அப்பரும் நகைச்சுவைப் பாடல்கள் எனக் கொள்ளதக்கபாக்கள் சில செய்துள்ளார்.

**"கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்**
**காலத்தைக் கழித்துப் போக்கி**
**தெள்ளியே னாகிநின்று தேடினேன்**
**நாடிக்காணேன்"**
**"உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்து**
**வெள்கினேன் வெள்கி நானும் விலாவறச்**
**சிரித்திட்டேனே**

திருஞானசம்பந்தமும், சுந்தரரும், பொய்ம்மையாளரைப் பற்றி ஆங்காங்கே குறித்துள்ளார்கள்

எடுத்துக்காட்டு :

**விழையாதார் விழைவார்போல்**
**குழையாதார் குழைவார்போல்**
**அழையாவும்............**
**பிழையாத........ பெருமானார்**
**திருப்பெருவேளூர்."** - ஞானசம்பந்தர் பாடல்.

அடியார் போல் நடிப்பவர் அக்காலத்திலும் பலர் இருந்தனர் என்னும் குறிப்பு)


பழமொழி ஆட்சிப் பாடல்கள் பல :

**"பாம்பின் வாய்த்தேரைபோல, கையில்**
**வெண்ணெய், நெய்க்கு அலைகின்ற",**
**திருவள்ளுவரைப்போல:**
**"பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்**
**பீழை தருவதொன்று இல்"**
**"கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்**
**சொல்லா திருக்கப் பெறின்"**
**"அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை**
**செறுவார்க்கும் செய்தல் அரிது."**
**"இரப்பவர்க் கீய வைத்தார்**
**ஈபவர்க் கருளும் வைத்தார்**
**கரப்பவர் தங்கட்கெல்லாம்**
**கடுநரகங்கள் வைத்தார்"** இத்தகு பாடல்கள் மூலம் அப்பர் பெருமான்றன் கூரிய மெய்யுணர்வு, வெளிப்படல் காண்கின்றோம்.

**"கைலை போலொளிர் -1**
**மயிலை மேவினார்**
**எயிலே ரித்தசீர்**
**பயில மேன்மையே"**
**"வெற்றியேதரும் -2**
**கற்றை வார்சடை**
**நெற்றி நீற்றினைப்**
**பற்றி வாழ்மினே"**

- திரு. எம். குப்புசாமி, பி.இ., எம்.எஸ்.,
பொறியாளர்

# கஜேந்திராழ்வார்



இந்த்ரத்யும்நன் என்ற அரசன் முழுமுதற் கடவுளாகிய திருமாலின் திருவடிகளை அடைந்து உய்ய வேண்டுமென்று கருதினான். ஏனெனில் அரச வாழ்வு நிலையற்றது என்பதை நன்கு உணர்ந்தவன்.

"ஆற்றங்கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும்" என்பதற்கிணங்க அரச பதவி திடீர் என்று ஒருநாள் பறிபோகும்.

**"மண்ணரசும் யான் வேண்டேன் பெருமா.**

**திருமொழி 4**

**"கம்பமதயானைக் கழுத்தகத்தின் மேல் இருந்து இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்."**

**(பெருமாள் திருமொழி 4/5)**

எனும் குலசேகராழ்வார் அருளிச் செயலுக்கு இணங்க அரச வாழ்வில் நாட்டமின்றி திருமால் பக்தியை மேற்கொண்டனன். தவத்தில் ஈடுபட்டு ஆழ்ந்த மனத்துடன் தவம் செய்து வந்தான். ஒருநாள் அகத்தியர், மன்னன் தவம் செய்யும் இடத்திற்குச் சென்றார். ஆழ்ந்த தவத்தில் ஈடுபட்டு இருந்த மன்னன் அகத்தியர் வரவை அறிந்து கொள்ள இயலாமல் போனான். மன்னன் கண்ணைத் திறந்து தன்னை வரவேற்பான் என்று நினைத்த அகத்தியர் சிறிது நேரம் காத்திருந்தார். ஏமாற்றம் அடைந்த அகத்தியர் பொறுமை இழந்து கர்ஜித்து அரசன் தன்னை அவமதித்து விட்டதாகக் கருதி சபித்து விட்டார். அகத்தியரின் கர்ஜனையைக் கேட்ட அரசன் விழித்தான். எதிரே கடுங்கோபத்துடன் நின்ற அகத்தியரை வணங்கி தன்னை மன்னிக்கும்படி வேண்டினான். ஆனால் அகத்தியரோ கோபம் தணியாமல் நான் வந்ததை உணர்ந்து வரவேற்காமல் அவமதித்ததால் அடுத்த பிறவியில் யானையாகப் பிறக்கும்படி சபித்து விட்டார். முனிவர்கள் கோபத்தை அறவே நீக்கவேண்டியவர்கள். அதனால்தான் தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டி "ஆறுவது சினம்" என்று பாடினார் போலும்.

அரசன் செய்வதறியாமல் மிகுந்த வருத்தத்துடன் மனம் கலங்கினான். சில நேரம் கழித்து மனதைத் தேற்றிக் கொண்டு தவத்தில் ஈடுபட்டான். மானிடப் பிறவியும் நீங்கியது. அடுத்த பிறவியில் காட்டில் வாழும் யானையாகப் பிறந்தான்.

யானையாகப் பிறந்த போதிலும் முன்பிறப்பின் குணத்தோடு திருமால் வழிபாட்டில் ஈடுபட்டது. தினமும் காலையில் காட்டில் இருந்த மடு ஒன்றில் இறங்கி நீராடி தன் துதிக்கையால் தண்ணீரையும் தாமரை மலரையும் எடுத்துக் கொண்டு சென்று அங்கிருந்த திருமால் திருமேனிக்கு நீரால் திருமஞ்சனம் செய்து, தாமரை மலரை ஒருகையில் சூட்டி, இரு முன்னங்கால்களை மடித்து அமர்ந்து

துதிக்கையால் வணங்கி, ஆதி மூலமே என்று அழைத்து மனநிறைவு பெற்று வந்தது. பின்னரே இரை தேடச் செல்லும்.

ஆறறிவு பெற்ற மக்களில் பக்தியுடையவர் காலையில் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளைப் பின்பற்றியது.

"இரை தேடு முன்பு இறைவனைத் தேடு" என்ற முதுமொழியை மாக்கள் (விலங்குகள்) இனத்தைச் சேர்ந்த கஜேந்திரனாகிய யானை தவறாமல் பின்பற்றி வந்தது. இங்கு "மாக்கள் மக்களாவதும் உண்டு" என்ற முதுமொழி மெய்ப்பிக்கப்படுகின்றது. அதிலும் திருமால் தாமரை மலரை பெரிதும் விரும்புவான் என்று உணர்ந்து அவன் உகப்பிற்காக, அவன் உகக்கும் தாமரை மலர் கொண்டு வழிபட்டது. இதனால் கை படைத்ததன் பலன் இறைவன் திருவடிகளில் மலர் தூவி வழிபடுவே என்றுணர்ந்து பகவத் தொண்டு செய்து வந்தது.



**"பயிலரங்கத்து அரவணையில் பள்ளி கொள்ளும்**
**கோவினை நாவுற வழுத்தி எந்தன் கைகள்**
**கொய் மலர்தூவி என்று கொலோ கூப்பும் நாளே"**

(பெருமா. திருமொழி 1-4)

எனும் குலசேகராழ்வார் அருளிச் செயல் கருத்தை வாழ்வில் கடைபிடித்து வந்தது கஜேந்திரன்.

இப்படிப் பல வருடங்கள் பகவத் தொண்டை நடத்தி வந்தது. கஜேந்திரன்


**ஆனையைக் கவ்விய முதலை**

அதே மடுவில் ஒரு முதலை வாழ்ந்து வந்தது. இம்முதலை முற்பிறப்பில் கந்தர்வனாக இருந்தவன். இக்கந்தர்வன் செருக்கினால் பெண்களுடன் ஆடையின்றி நதியில் நீராடினான். அதுமட்டுமின்றி அந்நதியில் நீரில் நின்று தவம் செய்து வந்த தேவ முனிவர் ஒருவர் காலைப் பிடித்துத் தூக்கித் துன்புறுத்தினான். கோபம் கொண்ட முனிவர் அவனை அடுத்த பிறவியில் முதலையாகப் பிறக்கும்படிச் சபித்துவிட்டார். எனவே இப்பிறப்பில் கஜேந்திரன் மலர்பறித்த மடுவில் முதலையாகப் பிறந்து வளர்ந்து வந்தான்.

**யானையும் முதலையும்**

ஒருநாள் யானை நீராடி, தாமரை மலரைப் பறித்துக் கொண்டு கரையேறும்போது முதலை யானையின் முன்னங்கால்களைக் கௌவிக் கொண்டது. முதலையின் வாய் சவ்வுத் தோலினையும் கூரிய பற்களையும், குகை போன்ற வாயினையும் கொண்டது. யானையின் அகன்ற பாதம் முதலையின் குகை போன்ற வாயில் பிடிபட்டது. முதலை தன் கூரிய பற்களால் யானையின் காலைக் கௌவிக் கொண்டது. **"மூர்கரும் முதலையும் கொண்டது விடா"** என்ற முதுமொழிக்கிணங்க, முதலை யானையின் காலை விடவில்லை. முதலைக்கு நீரில் வலிமை அதிகம். யானையோ பருத்த உடலையும், கனமான உருவத்தையும் கொண்டது. முதலையின் வாயிலிருந்து விடுபட அப்படியும் இப்படியும் அசைந்து அசைந்து முயன்றது. ஆனால் கரையோரம் ஒரே சேராகியது. யானை சேற்றின் உள்ளே கொஞ்சம் கொஞ்சமாக சென்று கொண்டிருந்தது. கரையில் யானை வலிமையுடையதாயினும் சேற்றில் அதனால் ஒன்றும் செய்ய இயலவில்லை. மீன்கள் யானையின் காலைக் கொத்தியதாலும், முதலையின் பற்கள் யானையின் கால்களை காயப்படுத்தியதாலும் குருதி பாய்ந்தது மடுவின் நீர் குருதியின் கலப்பில் நிறம் மாறியது. யானை தன் வலிமையை இழந்தது. இனி நம்மை நாமே காத்துக் கொள்ள முடியாது வருந்தியது. ஆபத்பாந்தவனான ஆதிமூலத்தை நினைத்தது. யானை தன் உயிரைப் பற்றி கவலைப்படவில்லை. திருமாலுக்கு சூட்டக்கூடிய துதிக்கையில் இருந்த மலர் வாடி விடுமே என்றும். வாடிய மலரைத் திருமாலுக்குச் சூட்டக்கூடாதே என்றும் தான் வருந்தியது.

"ஆதிமூலமே! இத்தாமரை மலர் இன்னும் சிறிது நேரத்தில் வாடிவிடும். இதுநாள் வரை அடியேன் உமது திருவடியில் சூட்டினேன். இன்று அப்பகவத் தொண்டிற்கு இடையூறு நேராத வண்ணம் நீரே வந்து ஏற்றுக் கொள்ளும்" என்று



நம்பிக்கையுடன் தும்பிக்கைத் தூக்கி ஆதிமூலமே என்றழைத்தது.

மீனமர் பொய்கை நாள்மலர் கொய்வான் வேட்கையினூடு சென்றிழிந்த கானமர் வேழம் கையெடுத்து அலற எனும் திருமங்கையாழ்வார் அருளிச் செயல் இங்கு நோக்கத்தக்கது. யானையின் பலவீனத்தை உணர்ந்தது ரத்தவெறிபிடித்த முதலை.

ஆதிமூலமே என்று ஆனை அழைத்த குரல், பரமபதமாகிய, வைகுண்டத்தை எட்டியது. இதைக் கேட்ட திருமாலும் திருமகளும் யாரோ ஒரு குரல் மண்ணுலகிலிருந்து ஆபத்தைப் போக்கும்படி கூப்பிடுகின்றதே என்று இருவரும் ஞானக்கண்ணால் உணர்ந்தனர்.

ஒரு மடுவில் ஒரு யானை ஒரு முதலையின் வாயில் அகப்பட்டு சிக்கித் தவிக்கின்றதே. தனது துதிக்கையில் உள்ள தாமரை மலர் வாடாத முன்பே வந்து ஏற்றுக் கொள்ளும்படி கூப்பிடுகின்றதே. தன் உயிரையும் பொருட்படுத்தாமல் பகவத் தொண்டுக்கு இடையூறு ஏற்படக் கூடாதே என்றல்லவோ கூப்பிடுகின்றது.

உடனே சென்று காப்பாற்ற வேண்டுமென்று காற்றினும் கடியாய் திருமகளையும் விட்டுவிட்டு புறப்பட்டான் திருமால். கருடனின் வேகம் குறைவாக இருந்ததால், கருடனை எடுத்து கை இடைவெளியில் வைத்துக் கொண்டு வேகமாக வந்து மடுவங்கரையை அடைந்தான்.

யானையின் துயரைக் கண்டு மனம் வருந்தினான். அத்துனை வேகமாக வந்த ஆதிமூலன் சட்டென நின்று யோசித்தான். முதலையின் வாய் யானையின் காலை எவ்வளவு தூரம் கௌவியுள்ளது என்று அறிந்து, முதலையின் கழுத்துக்குக் குறிவைத்து, சக்கரத்தாழ்வானை ஏவினான்.

**"கரா அதன் காலினைக் கதுவ ஆனையின் துயரம் தீரப்புள்ளூர்ந்து சென்று நின்று ஆழிதொட்டானை"** எனும் திருமங்கையாழ்வார் அருளிச்செயல் காணத்தக்கது. (பெரிய திருமொழி 2.3.9) சக்கரத்தாழ்வான் முதலையின் கழுத்தை அறுத்தது. திருமால் யானையின் துதிக்கையைப் பிடித்து இழுத்து கரையேற்றி முதலையின் தலையை நீக்கி யானையின் கால்களை விடுவித்தான். முதலையின் விழப் பற்களால் யானையின் கால்களில் ஏற்பட்ட காயத்தைத் தன் மேலாடையால் துடைத்தான். ஆடையின் மறுமுனையை உருண்டையாகச் சுற்றி, வாயினால் ஊதி, ஒற்றடம் கொடுத்தான். என்னே! ஆதிமூலத்தின் பாசமும் கருணையும். கஜேந்திரா! தாமதித்து வந்தேன் என்று வருந்தாதே என்று கூறி, அருகில் நின்று பாசத்துடன் தடவிக் கொடுத்தானாம்.

யானை திருமாலை நோக்கி, "ஆதிமூலனே நேற்று வரை அடியேன் உன் திருக்கோயிலுக்கு வந்து, உன்னை நீராட்டி, மலர்சூட்டி வழிபட்டேன். இன்று என்னால் வர இயலவில்லை. மற்றும் மாலை நெருங்கியதால் துதிக்கையில் உள்ள தாமரை மலர் வாடுமுன் ஏற்றுக் கொள்" என்று வேண்டியது. ஆதிமூலனும் யானையின் அன்புமலரையும், அன்புடன் சூட்டிய தாமரை மலரையும் ஏற்று அணிந்து மகிழ்ந்து, வாழ்த்தியருளினான். ஆனை தன் உயிரைப் பற்றியும் உடலைப் பற்றியும் சிறிதும் கவலைப்படாமல் திருமாலின் பகவத்தொண்டையே பெரிதாகக் கருதிய ஆழ்ந்த பக்தி எண்ணி எண்ணி வியக்கத்தக்கதாகும். எனவேதான் கஜேந்திரன், கஜேந்திர ஆழ்வான் என்று அழைக்கப்பட்டான். இவ்வரலாற்றைத் திருமாலடியார்கள் பக்திப் பாடல்களாலும், ஆழ்வார்கள் அருளிச் செயலாலும் கண்டு களிப்படையலாம்.

திருமாலடியார்கள்

**"ஆதிமூலம் என்ற ஆனையைக் காத்தாய்"**
**"மடுவினில் யானை முன் ஓடி முதலையை**
**மடித்து ரட்சித்தாயே!**

ஆழ்வார்கள்

**"ஒருவாரணம் பணி கொண்டவன்**
**பொய்கையில்"**
பெரியாழ்வார் திருமொழி 4-2-5)

**"கவள மா களிற்றின் இடர் கெடத் தடத்துக்**
**காய்சினப் பறவை ஊர்ந்தானே!"**
(திருவாய் மொழி 9-2-5)

**"ஆனைக்காகி செம்புலால் உண்டு வாழும்**
**முதலைமேல் சீறி வந்தார்"** (திருமாலை - 28)

**"விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்**
**வெள்ளெயிறு உற அதன் விடத்தினுக்கனுங்கி**
**அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த**
**அரங்கத்தம்மா!"** (திருப்பள்ளியெழுச்சி - 2)

**கைநாகத்திடர் கடிந்த கனலாழிப்**
**படையுடையான்**
பெரியாழ்வார் திருமொழி 4-9-11

**"பெண்ணுலாம் சடையினானும் பிரமனும்**

**உன்னைக் காண்பான்**
**எண்ணிலா ஊழி ஊழி தவம் செய்தார்**
**வெட்கி நிற்ப**
**விண்ணுளார் வியப்ப உவந்து ஆனைக்கு**
**அன்று**
**அருளை ஈந்த கண்ணரா!"** (திருமாலை - 44)

**"ஆனைக்கு நீ அருள் செய்தமையால்**
(பெரியாழ்வார் திருமொழி - 4-10-1)

**"திண் கைம்மா துயர் தீர்த்தவன்**
(பெரிய திருமொழி - 1-8-5)

**"பிறை மருப்பின் பைங்கண் மால் யானை**
**படுதுயரம் காத்தளித்த"**
(முதல் திருவந்தாதி - 29)

**"பிறை கோட்டுச் செங்கண் கரிவிடுத்த**
**எம்மான்"** (இரண்டாம் திருவந்ததி - 72)

ஆதிமூலனாகிய திருமால் ஆனைக்கு அருள் புரிந்த செந்தண்மையை மேலே கண்டவாறு சிறக்கப் பாடியுள்ளனர்.

ஆழ்ந்த பக்திகொண்ட ஆனைக்கும், ஆனைக்கு அருந்துயர் கொடுத்த முதலையை தன் சக்கரத்தால் மாய்த்தமையால் முதலைக்கும் மோட்சப் பதவி அளித்தான். பகைவர்க்கும் அருள் சுரக்கும் பரந்தாமனின் பண்பினைப் பாராட்டுவது எப்படி?

பத்துடை அடியவர்க்கு எளியனான திருமால், தன் மீது ஆழ்ந்த பக்தியுடைய கஜேந்திரன் ஆதிமூலமே என்று ஒரே குரல் கொடுக்க ஓடோடி வந்து காத்தருளினான். அத்துணை எளியவன் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன்.

**"ஒப்பிலேன் ஆகிலும் நின்னடைந்தேன்**
**ஆனைக்கு நீ அருள் செய்தமையால்"** எனும்
பெரியாழ்வார் அருளிச் செயலுக்கிணங்க, நாமும் திருமாலிடம் ஆழ்ந்த பக்தி கொண்டு, அவரது திருவருளுக்குப் பாத்திரர்களாகி இன்புறுவோமாக!

- முனைவர். எ. பரந்தாம ராமாநுஜதாசன்
செயலர் - திருமால் அடியார்குழாம், சென்னை

## ஸ்ரீ வைணவ அர்ச்சகர் பள்ளி மாணவர்களுக்கு பாராட்டு



தமிழக அரசின் திட்டத்தின் கீழ் ஸ்ரீ வைணவ திருக்கோயில்களில் சாதிப் பாகுபாடின்றி அர்ச்சகர்கள் நியமிக்க ஏதுவாக பள்ளியினை திருவல்லிக்கேணியிலும் திருவரங்கத்திலும் துவக்கியுள்ளது. அப்பள்ளியில் சேர்ந்துள்ள 33 மாணவப் பெருமக்களுக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீ வைணவ மகா சங்கத்தின் சார்பில் பாராட்டு விழா அருள்மிகு ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்றது. அனைத்து மாணவர்களுக்கும் 108 திருப்பதி தல வரலாறு, நித்ய அநுஷ்டானம், திருப்பல்லாண்டு, திருப்பாவை, திருவல்லிக்கேணி பாசுரங்கள், ஆழ்வார்கள் குறிப்பு வழங்கப்பட்டன.

செயலாளர் வேணு. ராச. நாராயணன் வரவேற்புரையில் "ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் திருக்கோட்டியூரில் ஸ்ரீ இராமாநுசர் அருளியது. 'இன்று தான் இத்திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது' என்று குறிப்பிட்டார்.

விழாவில் அமரர் திரு. நா. வேணுகோபால் நாயகர் நினைவுச் சொற்பொழிவினை திரு. தா. ஆராவமுத இராமாநுசதாசர் "பாரதியும் சாரதியும்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

சங்கத் தலைவர் திரு. ஏ. அச்சுதையா நன்றியுரை ஆற்றினார். முன்னதாக திருமால் வணக்கத்தினை செல்வி ஜெ. காயத்ரி இசைத்தார்.

விழாவினை திருக்கோயில் நிர்வாக அதிகாரியும் துணை ஆணையருமான பொ. ஜெயராமன் தலைமையேற்று நடத்திக் கொடுத்தார்.

திருவண்ணாமலை

# அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்

## சேவார்த்திகளுக்காக திருக்கோயிலில் மேற்கொள்ளப்பட்டுவரும் நலத்திட்டங்கள்

⌘ குருவாயூர் திருத்தலத்தில் உள்ளது போன்று வோர்த்திகள் தங்களது துலாபாரம் பிரார்த்தனையை நிறைவேற்றிட வசதி செய்யப்பட்டுள்ளது.

⌘ தங்கத்தேர் பிரார்த்தனை நிறைவேற்றும் வசதியும் உண்டு.

⌘ பௌர்ணமி நாட்களிலும் இத்தீபத்திருவிழா நாட்களிலும், திருக்கோயிலைச் சுற்றி எந்த வாகன நிறுத்தத்திற்கும் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை.

⌘ கிரிவலப்பாதையில் ஒவ்வொன்றும் ரூ. 12 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு இளைப்பாறும் கூடங்கள் மொத்தம் ரூ. 48 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ளன.

⌘ திருவண்ணாமலை நகரில் நவீன வசதிகளுடன் ஒரு திருமண மண்டபம் ரூ. 1.5 கோடி மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து அமைக்கப்பட உள்ளது.

⌘ மறைந்த நடிகை விஜி நினைவு திருமண மண்டபத்தில், இலவசமாகவும், மிகக்குறைந்த கட்டணத்திலும் முழு அடிப்படை வசதிகளுடன் திருமணங்கள் நடத்த வசதி செய்யப்பட உள்ளது.

⌘ திருக்கோயிலின் திருமதிலுக்கு வெளியே பக்தர்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றுமுகமாக ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியே குளியலறை வசதி மற்றும் கழிப்பிட வசதி போதுமான அளவு செய்திட திருக்கோயில் நிதி மற்றும் ஸ்ரீனிவாசா அறக்கட்டளை (T.V.S) நிறுவனத்தாரின் நிதி பங்களிப்புடன் மேற்கொள்ளப்படவுள்ளது.

⌘ கிரிவலப்பாதையில்,. நகர்ப்புறம் அல்லாத பஞ்சாயத்துப் பகுதிகளில் கிரிவலப்பாதை மின்விளக்குகளுக்கு இனி எப்போதும் மின்கட்டணம் செலுத்தி பராமரிப்பையும் இத்திருக்கோயிலே மேற்கொள்ளவுள்ளது.

⌘ மாதந்தோறும் வீடுதேடி வரும் பிரசாதம் பெறுவதற்கு கட்டளை அர்ச்சனை திட்டத்தில் சேருங்கள், ஒருமுறை அர்ச்சனை செய்ய ரூ. 25/ மாதந்தோறும் (பன்னிரண்டு மாதங்களுக்கு) (அமாவாசை, பௌர்ணமி மாதப்பிறப்பு, ஜென்ம நட்சத்திரம் போன்ற நாட்கள்) ரூ. 250/, ஒருவர் ஆயுட்காலம் முழுவதும் நிரந்தரமாக பிரசாதம் மாதந்தோறும் பெறுவதற்கு ரூ. 5,000/ முதலீடு செய்யலாம்.

⌘ ஒவ்வொரு பௌர்ணமி நாளன்றும் நடைபெறும் சிறப்பு நிகழ்வுகள் மற்றும் மக்களின் கருத்துருக்களை நேயர்களுக்கு கேட்டு மகிழும் வண்ணம் சென்னை, வானொலி விவித்பாரதியின் வர்த்தக ஒலிபரப்பு மாலை 6.00 மணிக்கு 783 கிலோ ஹெர்ட்ஸ் 383.1 மீட்டரில் DTH நேரடியாக ஒலிபரப்பு செய்கிறது. இந்நிகழ்ச்சி தமிழகம் மற்றும் இந்தியா முழுவதும் ஒலிப்பரப்பாகிறது என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

### வேண்டுகோள்

கிரிவல வழிபாட்டு குழுக்களாக இத்திருக்கோயிலுக்கு வருகைதருவோர் பௌர்ணமி மற்றும் திருவிழா நாட்கள் அல்லாத பிறநாட்களில் வந்து உழவாரப்பணி செய்து புண்ணியம் பெற்றுய்ய வேண்டுகிறோம்.

இத்திருக்கோயிலில் நடைபெறும் அறத்திட்டங்களான அன்னதானத் திட்டத்திற்கும், ஆதரவற்ற மாணவர்கள் தங்கிப் பயிலும் கருணை இல்லப் பராமரிப்பிற்கும், அருள்மிகு அண்ணாமலையார் சன்னதிகளுக்கு அபிஷேகப் பால் தந்தருளும் கோசாலையின் கால்நடைகளின் பராமரிப்பிற்கும், இன்னும் பௌர்ணமிதோறும் இத்தலத்திற்கு தவறாமல் வந்து கிரிவலம் செல்லும் சேவார்த்திகளின் பல்வேறு அடிப்படை தேவைகளை நிறைவு செய்தவற்கும், தங்களால் இயன்ற நன்கொடையை தாராளமாக வழங்குங்கள்.

திருவண்ணாமலை திருத்தலத்தின் முழுமுதற்கடவுளான அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலுக்கு நன்கொடை அனுப்புவோர் **அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்** என்பதை தவறாமல் குறிப்பிட வேண்டுகிறோம். **"அண்ணாமலையார்"** என்ற பெயரில் இத்தலத்தில் பூஜை மற்றும் தானங்களை செய்வதாக விளம்பரம் செய்யும் எந்த அமைப்பிற்கும் இத்திருக்கோயிலுக்கும் எந்த தொடர்பும் இல்லை.

கடிதத்தொடர்புகளை எளிதில் நினைவில் கொள்ள வசதியாக **"அஞ்சல் பெட்டி எண். 108, திருவண்ணாமலை நகர், தமிழ்நாடு, Post Box No. 108, Thiruvannamalai, Tamilnadu"** என்ற சுருக்கமான முகவரியில் கூட திருக்கோயிலை தொடர்பு கொள்ளலாம்.

**பி. வாசுநாதன்**, எம்.ஏ., பி.எல்.,
துணை ஆணையர் / செயல் அலுவலர்

**வ. தனுசு**, எம்.எஸ்ஸி.,
தலைவர், அறங்காவலர்குழு

அறங்காவலர்கள்

**பெ. கோவிந்தன், க. மணிவர்மா, அ. பானுமதி, இர. சீனிவாசன்**

# சிங்கர் குடியிருக்கும் சிங்கர்குடி

தமிழகத்தில் உள்ள நரசிம்மர் திருக்கோயில்களில் சிங்கர்குடி நரசிம்மர் திருத்தலம் பழமை வாய்ந்த திருக்கோயிலாகும்.


**திருக்கோயில் அமைப்பு**

மேற்கு திசையை நோக்கிய திருக்கோயிலில் மேற்கு திசையை நோக்கிய கருவறையில் நரசிம்மப் பெருமான் நெடி துயர்ந்த தோற்றத்துடனும் பதினாறு கைகளுடனும் காட்சியளிக்கிறார்.

**தல வரலாறு**

சூரிய வம்சத்தில் தோன்றிய நிமிச் சக்கரவர்த்தி என்னும் பேரரசன் வறுமை நீங்கி செல்வம் பெருகுவதற்கு யாகம் ஒன்றை நடத்த எண்ணி வசிட்ட முனிவரிடம் சென்று யாகத்தை நடத்தித் தரவேண்டுமென வேண்டிக் கொண்டான். வசிட்டர் அன்றைய தினம் வர இயலாமையை கூறியதை அடுத்து யாகம் தடைபடாமல் குறித்த நாளில் நடைபெற வேண்டுமென்று நிமிச் சக்கரவர்த்தி கௌசிக முனிவரை அழைத்து வந்து யாகத்தை சிறப்பாக நடத்தி முடித்தான்.

யாகத்தை முடித்து ஒய்வெடுத்துக் கொண்டிருக்கும் நிமிச் சக்கரவர்த்தியை காண்பதற்கு வசிட்டர் வருகின்றார். நிமிச்சக்கரவர்த்தியிடம் வசிட்டர், “யாகத்தை நடத்தித் தருவதற்கு நான் வரவில்லை என்று அறிந்தும் வேறொரு நாளில் நடத்தாமல் என் எதிரியான கௌசிகனை வைத்து யாகத்தை நடத்தியது குருத்துரோகமல்லவா என்று ஆவேசமாக கூறியதுடன் நீ இன்று முதல் உடல் நீங்கி உருவமற்ற உயிராக வாழ்வதாக என சாபமிட்டார். சாபத்தை உணர்ந்த நிமிச் சக்கரவர்த்தி கடுங்கோபம் கொண்டார். எனக்குத் தந்த அந்த சாபத்தைப் போன்றே தாங்களும் உடல் நீங்கி வாழக் கடவதென சாபமிட்டார். நிமிச்சக்கரவத்தியின் சாபமும் பாதிக்குமென்று வசிட்டருக்குத் தெரியும். பதில் ஒன்றும் சொல்லாமல் வசிட்டர் சென்று விட்டார்.



உருவமற்ற உயிராக உலவி வந்த வசிட்ட முனிவர் சாப விமோசனம் பெறுவதற்கு ஏற்ற வழியை தன் தந்தையான பிரம்ம தேவரிடம் சென்று நடந்ததைக் கூறி சாபவிமோசனம் கேட்க அதற்கு தந்தையார், “நீ பூவுலகில் பஞ்ச கிருஷ்ணாரண்யங்களில் ஒன்றான சிங்கப் பெருமான் குடிகொண்டிருக்கும் சிங்கர்குடிக்குச் சென்று திருமாலை துதித்து தவம் புரிந்து உடலோடு உயிர்சேரப் பெருவாய்” எனக் கூறினார்.

வசிட்ட முனிவர் சிங்கர் குடிக்கு வந்து தவமியற்றினார். தவத்தை மெச்சிய நரசிம்மர் திருமகளோடு காட்சியளித்து பின்னர் உக்ர நரசிம்மராக காட்சியளித்தார். வசிட்ட முனிவர் சாபவிமோசனம் அடையப் பெற்றார் என்பது இக்கோயிலின் தல புராணமாகும்.

**மூலவர்**

சங்கு, பிரயோக சக்கரம், பதாக ஹஸ்தம், குறுவாள், காணம், வில், கதை, கேடயம் போன்ற ஆயுதங்களை தாங்கியும் அசுரனின் தலையறுத்தல், அசுரன் ஒருவனை கத்தியால் கொல்லுதல், இரணியனின் காலைப் பற்றுதல், இரண்யனின் வயிற்றைக் கிழித்தல், குடலைப் பிடுங்குதல், குடலை மாலையாகப் பிடித்திருத்தல், வெட்டப்பட்ட தலை, இரண்யனின் தலையை அழுத்திப் பிடித்திருத்தல் போன்ற நிகழ்ச்சிகளைக் கொண்ட பதினாறு கரங்களுடன்

வேறெங்கும் காண முடியாத உக்கிர நரசிம்மராகக் காட்சியளிக்கிறார்.

புதுப்பேட்டை **வ.கோவிந்தன், எம்.ஏ.,**



நரசிம்மரின் இடப்புறம் இரண்யன் மனைவி நீலாவதி, வலப்புறம் அசுரர் மூவர், பிரகலாதர், வசிட்ட முனிவர், சுக்கராச்சாரியார் ஆகியோர் உள்ளனர்.

கருவறை அர்த்த மண்டபத்தையொட்டி இடப்புறம் கிழக்கு நோக்கி இலட்சுமி சந்நிதியும், வலப்புறம் கிழக்கு நோக்கி கனகவல்லித் தாயார் சந்நிதியும் உள்ளன.

குளத்திற்கு எதிர்புறம் அமைந்துள்ள துர்க்கை கோயிலில் அமைந்துள்ள துர்க்கை சிலையே இக்கோயிலில் உள்ள சிலைகளில் மிகவும் பழமையானதாகும். இச்சிலை கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர் காலப்படைப்பாகும்.

குளத்தையொட்டி விநாயகர் சந்நிதி அமைந்துள்ளது. கருவறை அர்த்த மண்டபம், மகா மண்டபம் அனைத்தும் கருங்கற்களால் எழுப்பப்பட்டுள்ளன.

### கல்வெட்டுகள்

இத்தலத்தில் இடம் பெற்றுள்ள கல்வெட்டுகள் யாவும் முழுமையாக இன்றி சிதைந்தும், துண்டு துண்டாகவும், தொடக்கமும் முடிவும் இன்றி காணப்படுகின்றன.

இவ்வூரின் தெற்கில் பெருவழி (ராஜபாட்டை) இருந்த செய்தியும், இவ்வழியின் வடதிசையில் 'ஒதியங்குளம்' என்ற ஊர் இருந்ததையும் ஒரு கல்வெட்டால் அறியலாம்.

மற்றொரு கல்வெட்டு மூலம் இக்கோயிலில் பெருமாளுக்கும் நாச்சியாருக்கும் விஜயநகர அரசர், தங்க ஆபரணங்களை செய்து கொடுத்ததையும், அவற்றை பாதுகாக்க வெண்கல உலோகத்தால் ஆன பெட்டி ஒன்றையும் செய்து அளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. மேலும் 'திருமலாபுரம்' என்ற ஊரின் பெயர் கூறப்பட்டுள்ளது. தற்போது சிங்கர் கோயில் என்று கோயில் பெயராலேயே வழங்கும் இவ்வூரின் ஆதிப்பெயர். 'திருமலாபுரம்' என்று இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

கருவறை வடதிசையிலுள்ள ஒரு கல்வெட்டுத் துண்டு சிற்றப்பனின் தீய எண்ணத்தால் சித்தப் பிரமை பிடித்த ஒருவரின் பைத்தியம் தீர்ந்து நலம் பெற அவரின் தந்தை வேண்டிக் கொண்டு சித்தம் தெளிந்தபடியால் இப்பெருமாளுக்கு அவர் செய்துள்ள தானத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

விருகு முனிவர், பிரகலாதன் ஆகியோருக்குக் காட்சி தந்த திருத்தலம்.

### அமைவிடம்

கடலூரிலிருந்து புதுச்சேரிக்கு செல்லும் வழியில் 12 கி.மீ. தொலைவிலும், புதுச்சேரியிலிருந்து கடலூர் செல்லும் வழியில் 11 கி.மீ. தொலைவிலும் உள்ள தவளக்குப்பம் என்னும் ஊரிலிருந்து மேற்கில் 2 கி.மீ. தொலைவில் (அபிஷேகப்பாக்கம்) உள்ளது.

### திருவிழாக்கள் - உற்சவங்கள்

ஒவ்வொரு மாதம் சுவாதி நட்சத்திரம், பிரதோஷம் அன்று சிறப்பு திருமஞ்சனம் நடைபெறுகிறது.

ஆண்டுதோறும் சித்திரை - வைகாசி மாதத்தில் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. நரசிம்ம ஜெயந்தி அன்று ரத உற்சவம் (திருத்தேர்) நடைபெற்று வருகிறது மற்றும் கிருஷ்ண ஜெயந்தி, கார்த்திகை தீபம், வைகுண்ட ஏகாதசி, மாட்டுப் பொங்கல் உற்சவம், மாசிமகம், பங்குனி உத்திரம் போன்ற உற்சவங்கள் நடைபெறுகிறது.

இங்கு வைகானஸ ஆகம விதிமுறைப்படி பூஜைகள் நடைபெறுகிறது.

தரிசன நேரம்

காலை 7.30 மணி முதல் பகல் 12.00 மணி வரை

மாலை 4.30 மணி முதல் இரவு 9.00 மணி வரை

சிங்கர் கோயில் ஒரு பிரார்த்தனை தலம். இத்தல பெருமானை தரிசனம் செய்து பிணிகள் நீங்கி நல்வாழ்வு பெறுவோம்.


# சிவபுரம் சிவாலயம்!

தஞ்சை பெரிய கோயிலைக் கட்டிய முதலாம் இராஜராஜ சோழன் கட்டிய ஆலயம் - முழுவதும் கருங்கல்லினாலும் கல்வெட்டுக்களாலும் ஆன கற்றளி கோயில் - எழிலான சிற்பங்கள் கொண்ட ஆலயம் - அமைதிவழியில் நதிநீர் பங்கீடு செய்த தலம் - அடியார்களுக்கும், ஆலயப் பணியாளர்களுக்கும் பசிப்பிணி நீக்கிய ஆலயம் என பல்வேறு பெருமைகள் கொண்ட திருத்தலமாக திகழ்வது, காஞ்சிபுரம் மாவட்டம் - ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் அமைந்துள்ள சிவபுரம் சிவாலயம்.

### தொன்மைச் சிறப்பு

தஞ்சை பெரிய கோயில் எனப்படும் பிரகதீஸ்வரர் ஆலயம் கட்டிய முதலாம் இராஜராஜ சோழனால் (கி.பி. 985-1014) அடிக்கல் நாட்டப்பட்டு, ஆலயப்பணி தொடங்கியது. இவரின் மகன் முதலாம் இராஜேந்திர சோழனால் (கி.பி. 1012-1044) திருப்பணி நிறைவு செய்யப்பட்டது. இவ்வூரின் பெயர் மன்னனின் பெயராலேயே ஸ்ரீஇராஜராஜேஸ்வரம் என வழங்கப்பட்டது. இதன் இன்றைய பெயர் சிவபுரம்.

கும்பகோணம் அருகேயும் ஒரு சிவபுரம் என்ற தேவாரத் திருத்தலம் அமைந்துள்ளது. இத்தலத்தினை திருஞான சம்பந்தர், அப்பர் பாடியுள்ளனர். திருமால் வராகமாகப் பூசித்த தலம், இறைவன் பெயர் சிவபுரநாதர். இறைவி சிங்காரவல்லி என வழங்கப்பட்டது.



### நதிநீர்பங்கீடு

இன்று நதிநீர் பங்கீடு என்பது பிரச்சினைக்குரிய விஷயமாக இருப்பது அறிந்ததே. ஆனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இப்பகுதி மக்கள் நதி நீர்ப்பங்கீட்டினை எந்தவித சலசலப்பும் இல்லாமல் கால்வாய் வெட்டிய செய்தியை கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.

இன்றைய ஸ்ரீபெரும்புதூரின் அன்றைய பெயர் பராந்தகச்சேரி. சிவபுரம் அருகேயுள்ள கூவம் ஊர் மக்கள் (கூவத்தின் பழைய பெயர் மதுராந்தகநல்லூர்), ஸ்ரீபெரும்புதூரில் இருந்து, கூவத்திற்கு கால்வாய் வெட்டி, அதன் மூலம் வாய்க்கால் ஓடும் பகுதிகளும், கூவமும் பயன்பெற்றதை கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது.

### மக்கள் சேவையில் - மகேசன் சேவை

ஆலயங்கள் ஆன்மீகத்தினை மட்டுமே வளர்க்கவில்லை, கூடவே மக்கள் சேவையிலும் பணியாற்றியதை இவ்வாலயக் கல்வெட்டுக்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

முதலாம் இராஜராஜனின் 26-ஆம் ஆட்சியாண்டில், "இராஜராஜன் காசு" என்று அழைக்கப்பட்ட பத்து காசுகளைக் கொண்டு நிலம் வாங்கப்பட்டது. இந்த நிலம் சிவபுரம் சிவாலயத்திற்கு வழங்கப்பட்டது. இதன் வருவாய் சிவனடியாருக்கு உணவளிக்க உதவியது.

இதேபோல, இதே மன்னன் காலத்தில், நீர் வேளூர் நாட்டு, ஊற்றுக்காட்டுக் கோட்டத்தில் உள்ள மகாசபைகளுக்கும், ஊரார்களுக்கும், கோயிலுக்கும் தானங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிவபுரம் கோயில் களஞ்சியத்திற்கு மகாசபையும், ஊராரும் நெல்மணிகளை வழங்கி வந்தனர். ஆலயத்திற்கு வழங்கப்பட்ட பொன்னும் பொருளும் ஊர் மக்களுக்காகவே பயன்பட்டது. இச்செய்தி கி.பி. 1044 கல்வெட்டில் குறிப்பிட்டு உள்ளது.



பணியாளர்களுக்கும், ஆலயம் வரும் அனைத்து அடியார்களுக்கும் உணவு வழங்கி பசிப்பிணி நீக்கிய ஆலயமாக சிவபுரம் திகழ்ந்தது.

உணவளிக்கும் திட்டம் வகுத்த ஆலய நிர்வாகத்தினை நினைத்து நாமும் பெருமைப்படலாம்.

## ஆலய அமைப்பு

இவ்வாலயம் சோழர்காலப் பாணியில் கற்றளியாக (கருங்கற்களால்) அமைக்கப்பட்டு உள்ளது. சுவர் முழுக்க கல்வெட்டுக்கள் நிறைந்துள்ளன.

கர்ப்பகிருகம், அஸ்திராணம், அர்த்தமண்டபம் மற்றும் முக மண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளன. முகமண்டபத்தில் முதலாம் இராஜராஜன் காலத்து துவாரபாலகர்கள் எழிலுடன் காட்சி தருகின்றனர்.

தேவகோட்டத்தில், கணபதி, தட்சிணாமூர்த்தி, தெற்கிலும், மேற்கிலும் லிங்கோத்பவர், வடக்கே பிரம்மா, துர்க்கையும் தெய்வ வடிவங்களாக அமைந்துள்ளன.

ஏகதள விமானத்தில் பூதகண வரிசையும், யானை வரிசையும் காணப்படுகின்றது.

நான்கு மூலையிலும் அழகிய நான்கு கல் நந்திகள் எழிலுடன் அமைந்துள்ளன. ஆலய சிற்பங்கள் அனைத்தும் சிற்பங்களுக்கு எடுத்துக்காட்டுக்களாக திகழ்வது குறிப்பிடத்தக்கது.


## ஆலயப் பணியாளர்களுக்கும், அடியாரர்களுக்கும் பரிவு காட்டிய கோயில்

கோயிலுக்கு வரும் அடியார்களுக்கும், ஆலயப் பணியாளர்களுக்கும் உணவு வழங்கி பசிப்பணி போக்கிய அரிய செய்தியும் கல்வெட்டில் காணப்படுகின்றது. இதே போல ஆலயப் பணியார்கள் பெயர்களையும் அறிய முடிகிறது.

திருஉண்ணாழி உடையார், ஆறு மணிகள், தேவரடியாரின் ஒரு பிரிவான பதியிலார், பஞ்சசாரியர், உவச்சரிகள் (துணி துவைப்பவர்), திருப்பதிகம் பாடும் கலைஞர், அரசாணை நகல் எடுக்கும் திருவாய்க்கேள்வி உடையான், சாமரம் வீசுவோர், குடைபிடிக்கும் பள்ளித் தொங்கல், கணக்கர், கருவூல அலுவலர், காவலர், மாலை தொடுப்பவர், விளக்கு ஏற்றுபவர், தாங்கிப் பிடிப்பவர் என பல்வேறு

## அமைவிடம்

இவ்வாலயம் காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் பேரம்பாக்கம் என்ற ஊரின் வெகு அருகில் அமைந்துள்ளது.





இவ்வூருக்கு வருவதற்கு பேரம்பாக்கம் வரவேண்டும். பின் அங்கிருந்து ஆட்டோ மூலம் எளிதில் சிவபுரம் செல்லலாம்.

பேரம்பாக்கம் சென்னைக்கு மேற்கே 60 கி.மீ. அரக்கோணத்தில் இருந்து கிழக்கே 30 கி.மீ. திருவள்ளூருக்கு தென்மேற்கே 18 கி.மீ. காஞ்சீபுரத்திற்கு வடக்கே 45 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

பேரம்பாக்கத்தில் இருந்து மேற்கே 5 கி.மீ. தொலைவில் சிவபுரம் அமைந்துள்ளது. கோயம்பேடு மற்றும் பூந்தமல்லியில் இருந்து பேருந்து வசதி உண்டு.

சிவபுரத்தைச் சுற்றி கூவம், இருளஞ்சேரி நரசிங்கபுரம், பேரம்பாக்கம், தக்கோலம், இலம்பையங்கோட்டூர் போன்ற புகழ்மிக்க ஆலயங்கள் அமைந்துள்ளன. சோழர் காலத்தில் மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்த இச்சிவாலயம், தமிழ்நாடு தொல்லியல் துறையின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

பல்வேறு திட்டங்களுக்கு வழிகாட்டிய இத்திருக்கோயில், இன்று பழைய நினைவுகளையும் பெருமைகளையும் அசைபோட்டுக் கொண்டு வாழ்ந்து வருகின்றது.

சிவபுரம் ஆலயத்தை சிறப்புறச் செய்ய வேண்டியது, ஒவ்வொரு சிவனடியாரின் கடமையாகும் என்றால் அது மிகையல்ல.

- படமும், படைப்பும் : **பனையபுரம் அதியமான்**



25.09.2007 அன்று திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலின் நிர்வாகம் குறித்து மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட ஆய்வின்போது தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் திரு. து. இராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வ. தனுசு, அறங்காவலர்கள் திரு. பெ. கோவிந்தன், திரு. இர. சீனிவாசன் மற்றும் விழுப்புரம் மண்டல இணை ஆணையர் திரு. இரா. சுப்பிரமணியன் அவர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

குன்றத்தூர்

# அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

சென்னைக்கு தென்மேற்கே 20கிலோ மீட்டர் தொலைவிலும், பல்லாவரத்திற்கு மேற்கே, போரூருக்குத் தெற்கே, பூவிருந்தவல்லிக்கு தென்கிழக்கே 7 கிலோமீட்டர் தொலைவிலும் இத்திருத்தலம் அமைந்துள்ளது. திருத்தணிகை செல்லும் வழியில் ஒரு முகூர்த்த காலம் இம்மலையில் முருகப்பெருமான் தங்கியிருந்ததாக புராண வரலாறு. நடுவில் தேவியர் இருவருடன் குன்றிலமர்ந்த பெருமான் குயில்கூவ, மயிலோடும், மகிழ்ந்து காட்சி அளிக்கிறார்.

தலச்சிறப்பு :

பெரிய புராணம் அருளிச் செய்த தெய்வச் சேக்கிழார் பெருமான் அவதரித்த திருத்தலம் குன்றத்தூர் ஆகும். குன்று ஒன்று இவ்வூரில் உள்ளதால் குன்றத்தூர் என்று பெயர் பெற்றது. இக்குன்றின் மீது முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் காட்சி அளித்து பக்தர்களின் வேண்டுதல்தனை நிறைவேற்றி அருள்பாலிக்கிறார். வடதிசை நோக்கி அமர்ந்து முருகன் அருள்பாலிப்பது இத்தலத்திற்கு ஒரு தனிச் சிறப்பு.

மூர்த்தி தலம், தீர்த்தம் சிறப்பு :


கருவறைக்குள் வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்பிரமணியரின் சுந்தரக்கோலம் காணலாம். அதில் ஓர் அதிசயமும் காணலாம். மூவராக இருந்தாலும் ஒரு சேர அவர்களை தரிசிக்க முடியாது. இங்கு ஒரு பக்கத்தில் நின்று பார்த்தால் வள்ளி முருகனும், மறுபக்கத்தில் நின்று பார்த்தால் தெய்வானை முருகனும் காட்சி அளிக்கிறார்கள்.

ஸ்தல தீர்த்தம் : சரவணப் பொய்கை

ஸ்தல விருட்சம் : வில்வமரம்

வரலாற்றுச் செய்தி :

இத்திருக்கோயிலில் ஒரே ஒரு கல்வெட்டு மட்டுமே உள்ளது. அதன் மூலம் (கி.பி. 1726) இக்கோயில் மதுரை நாயக்கர் காலத்தில் அமைக்கப்பட்ட செய்தி தெரிய வருகிறது, என்று டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார் பி.எச.டி., தெரிவிக்கிறார். இம்முருகன் மீது அருணகிரிநாதர் மூன்று பாடல்கள் பாடி உள்ளார். அவைகள் "அழகெறிந்த, சந்திரபிடியதன், நேசாதாரா" என்று தொடங்கும் பாடல்கள் ஆகும்.



திருக்கோயில் பிரதட்சணம் :

எழுபத்தி ஐந்து படிகளை கொண்ட முகப்பில் 16 கால்மண்டபம் உள்ளது. அதைக் கடந்து படிகளில் ஏறி வழியில் உள்ள வலஞ்சுழி விநாயகரைத் தொழுது ராஜகோபுர தோரண வாயிலை அடையலாம். கொடிமர தரிசனத்துடன் இடப்புற வெளிச்சுற்றில் கல்யாண மண்டபம், பைரவர்சன்னதி, நவகிரக சன்னதி, தீர்த்தக்கிணறு, வேம்பு அரசு மேடை, திருமடப்பள்ளி, தட்சிணாமூர்த்தி சன்னதி, துர்க்கை அம்மன் சன்னதி, வில்வமரத்தடி வினாயகர், தலவிருட்சம் வில்வம் என பலவற்றை தரிசிக்கலாம்.

கொடிமரம் தாண்டி கிழக்கு வாசல் வழியே நுழைந்தால் வெளிமண்டபத்தில் கணபதி காசி விசுவநாதர் விசாலாட்சி சன்னதிகளை தரிசிக்கலாம். பிறகு அர்த்த மண்டபத்தில் நுழைந்து வள்ளி தெய்வானையுடன் கூடிய குமரக் கடவுளின் சுந்தரக் கோலத்தை கண்ணாரக்கண்டு களிக்கலாம் இத்திருக்கோயிலில் பிரார்த்தனை திருமணங்கள் அதிக அளவில் நடைபெறுகின்றன. சென்னையிலிருந்து குன்றத்தூருக்கு 88A,C,D,E,G,K,L,M,R,M89,M60,60A, E,66,PP66 பேருந்துகள் வருகின்றன. இத்திருக்கோயிலில் கீழ்கண்ட உற்சவங்கள் நடைபெறுகின்றன.

1. சித்திரை கிருத்திகை 2. சித்திரை சஷ்டி 3. தமிழ் புத்தாண்டு 4. வைகாசி விசாகம் 5. ஆடி கிருத்திகை 6. நவராத்திரி (உப கோயில்) 7. கந்த சஷ்டி 8. திருக்கார்த்திகை தீபம் 9. ஆங்கில புத்தாண்டு 10. வைகுண்ட ஏகாதசி (உப கோயில்) 11. ஆருத்திரா (உபகோயில்) 12. காணும் பொங்கல் 13. தைக்கிருத்திகை 14. தைப்பூசம் 15. மகர சிவராத்திரி (உப கோயில்) 16. பங்குனி உத்திரம்.

குன்றத்தூருக்கு செல்வோமே குமரனின் அருள் பெருவோமே.

# அருள்மிகு உமையம்மை

## 108 போற்றிகள்



1. ஓம் அகர முதலென ஆனாய் போற்றி
2. ஓம் அகில உலகுக்கும் அன்னாய் போற்றி
3. ஓம் அஞ்செஞ் சீரடி அமுதே போற்றி
4. ஓம் அடியவர்க் கின்பம் அருள்வாய் போற்றி
5. ஓம் அடியார் உளத்துள் விளக்கே போற்றி
6. ஓம் அடியார் வினைகெட ஆள்வாய் போற்றி
7. ஓம் அணுகா தவர்க்குப் பிணியே போற்றி
8. ஓம் அணுவிலும் சிறிய அணுவே போற்றி
9. ஓம் அண்டம் யாவையும் பூத்தாய் போற்றி
10. ஓம் அரவ முடியில் இருப்பாய் போற்றி
11. ஓம் அருள்சூல் கொண்ட அம்மா போற்றி
12. ஓம் அருள்நிறை கடலே அமுதே போற்றி
13. ஓம் அழகன் முருகனை அளித்தாய் போற்றி
14. ஓம் அறத்தின் வடிவே அருளே போற்றி
15. ஓம் அறிவும் மகிழ்வும் அருள்வாய் போற்றி
16. ஓம் அறுவர்க்கு இளைய நங்காய் போற்றி
17. ஓம் ஆகமப் பொருளாய் நிறைந்தாய் போற்றி
18. ஓம் ஆசை தீரக் கொடுப்பாய் போற்றி
19. ஓம் ஆடகத் தாமரை அணங்கே போற்றி
20. ஓம் ஆடல் கண்டருளிய அணங்கே போற்றி
21. ஓம் ஆதி முதலே அருளே போற்றி
22. ஓம் ஆயிரம் திருப்பெயர் உடையாய் போற்றி
23. ஓம் ஆரா அமுதம் ஆனாய் போற்றி
24. ஓம் ஆருயிர் வளர்க்கும் மருந்தே போற்றி
25. ஓம் ஆலம் அமுதுசெய் அன்னாய் போற்றி
26. ஓம் ஆறா தாரத்து அமர்ந்தாய் போற்றி

27. ஓம் இமயமடக்கொடித் தாயே போற்றி
28. ஓம் இமவான் பெற்ற தவமே போற்றி
29. ஓம் இரவாய்ப் பகலாய் விரிந்தாய் போற்றி
30. ஓம் இருமையும் உதவும்எம் தாயே போற்றி
31. ஓம் ஈசர் பாகத்து உறைவாய் போற்றி
32. ஓம் உயிர்க்கு உயிராம் உணர்வே போற்றி
33. ஓம் உலகெலாம் ஈன்ற உமையே போற்றி
34. ஓம் உள்ளக் கோயில் விளக்கே போற்றி
35. ஓம் எல்லா உலகமும் ஆனாய் போற்றி
36. ஓம் ஏதம் அகற்றும் மாதே போற்றி
37. ஓம் ஏழிசை வல்லி எந்தாய் போற்றி
38. ஓம் ஒளிமதிச் செஞ்சடை உடையாய் போற்றி
39. ஓம் ஒளிரும் ஒளிக்கு இடமே போற்றி
40. ஓம் ஒன்றில் விரிந்த பலவே போற்றி
41. ஓம் ஓங்கார உட்பொருள் உமையே போற்றி
42. ஓம் ஓசை ஒலிஎலாம் ஆனாய் போற்றி
43. ஓம் ஓத அரிய உணர்வே போற்றி
44. ஓம் ஐங்கரன் தன்னை அளித்தாய் போற்றி
45. ஓம் ஐந்தெழுத்துட் பொருள் ஆனாய் போற்றி
46. ஓம் ஐந்தொழில் இயற்றும் அன்னாய் போற்றி
47. ஓம் கடவுள் மணியே கதிரே போற்றி
48. ஓம் கண்ணார் அமுதக் கடலே போற்றி
49. ஓம் கண்ணே கண்ணின் மணியே போற்றி
50. ஓம் கயிலைப் பதமருள் கருணை போற்றி
51. ஓம் கருமையில் அழகிய கலையே போற்றி
52. ஓம் கரும்பின் இனிய மொழியாய் போற்றி
53. ஓம் கற்பகத் தருவே கலையே போற்றி
54. ஓம் கன்னியர் நோன்பு உகப்பாய் போற்றி
55. ஓம் காவியங் கண்ணி உமையே போற்றி
56. ஓம் கானகம் உகந்த காளி போற்றி
57. ஓம் குவளை மலர்க்கண் கொண்டாய் போற்றி
58. ஓம் கொன்றை வேய்ந்த சூழலாய் போற்றி
59. ஓம் சங்கரனார் மனை விளக்கே போற்றி
60. ஓம் சிந்தை குடிபுகும் சிவையே போற்றி
61. ஓம் சிறக்கும் கமலத் திருவே போற்றி
62. ஓம் சீர்சால் வரமருள் தாயே போற்றி
63. ஓம் தமிழின் இனிய சுவையே போற்றி
64. ஓம் தாருகன் பேருரம் கிழித்தாய் போற்றி
65. ஓம் திருநீற்று ஒளியே திறமே போற்றி
66. ஓம் தீபச்சுடராய்த் திகழ்வாய் போற்றி
67. ஓம் தூயர் உளத்தில் இருப்பாய் போற்றி
68. ஓம் தேடற்கு அரிய நிதியே போற்றி
69. ஓம் தோன்றாத் துணைக்கோர் துணையே போற்றி
70. ஓம் நஞ்சமு தாக்கிய நங்காய் போற்றி
71. ஓம் நறுமா மலர் சடையாய் போற்றி
72. ஓம் நாயகி நாரணி நான்முகி போற்றி
73. ஓம் பஞ்சினும் மெல்லடிப் பாவாய் போற்றி
74. ஓம் பண்ணார் இன்தமிழ்ப் பாவாய் போற்றி
75. ஓம் பழமறைப் பொருளே பயனே போற்றி
76. ஓம் பனிமால் இமயப் பிடியே போற்றி
77. ஓம் பாசம் அங்குசம் உடையாய் போற்றி
78. ஓம் பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி
79. ஓம் பாலினும் நன்மொழிப் பாவாய் போற்றி
80. ஓம் பிறவிப் பிணிக்கோர் மருந்தே போற்றி
81. ஓம் பிள்ளைச் செல்வம் அருள்வாய் போற்றி
82. ஓம் புவித்தலம் அனைத்தும் பூத்தாய் போற்றி
83. ஓம் பூதம் ஐந்தாய் விரிந்தாய் போற்றி
84. ஓம் மகிடன் தலைமேல் அந்தரி போற்றி
85. ஓம் மங்கல மங்கையர் தவமே போற்றி
86. ஓம் மஞ்சள் குங்குமம் காப்பாய் போற்றி
87. ஓம் மணியே மணியின் ஒளியே போற்றி
88. ஓம் மருளில் விளைந்த தெருளே போற்றி
89. ஓம் மலரே மலரின் மணமே போற்றி
90. ஓம் மலைவளர் காதலி உமையே போற்றி
91. ஓம் மலையவன் மகளாய் உதித்தாய் போற்றி
92. ஓம் மரகத மணியின் ஒளியே போற்றி
93. ஓம் முத்தலைச் சூழ முதல்வி போற்றி
94. ஓம் முப்பத் திரண்டறம் வளர்ப்பாய் போற்றி
95. ஓம் முப்புரம் எரித்த முதல்வி போற்றி
96. ஓம் முழுவதும் ஈன்ற முதலே போற்றி
97. ஓம் மூவா முகுந்தற்கு இளையாய் போற்றி
98. ஓம் மோகம் அழிக்கும் முதல்வி போற்றி
99. ஓம் யாவர்க்கும் மேலை இறைவி போற்றி
100. ஓம் யாழினும் இனிய மொழியாய் போற்றி
101. ஓம் வஞ்சகர் நெஞ்சில் வாராய் போற்றி
102. ஓம் வம்பில் பழுத்த கனியே போற்றி
103. ஓம் வாசமலர் எலாம் ஆனாய் போற்றி
104. ஓம் வெற்றி வெல்போர்க் கொற்றவை போற்றி
105. ஓம் வேண்ட முழுதும் தருவாய் போற்றி
106. ஓம் வேண்டுவோர் வேண்டுவ ஈவாய் போற்றி
107. ஓம் வேதத் தொடையின் பயனே போற்றி
108. ஓம் வேதநாயகியே போற்றி போற்றி

(நிறைவாக அந்தந்த திருத்தலத்திற்கு உரிய அம்மையின் பாடல் ஒன்றினை ஓதிப் போற்றியை நிறைவு செய்யலாம்)

⌘⌘⌘

தனந்தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில்
வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர்
என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள் அபிராமி
கடைக்கண்களே

- அபிராமி அந்தாதி

## கோவில்பட்டி

# அருள்மிகு பூவனநாதசுவாமி

**"நஞ்செய்யொரு புன்செய்கள் நன்மரங்கள்**
**பூஞ்சோலை**
**மஞ்சுதவழ் மாமலைகள் வானருவி - செஞ்சொல்**
**மருந்துதரும் பெண்கொண்டு வாழ்மாந்தர் நீத்தார்**
**பொருந்துநகர் கோவிற் புரி"**
**- 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ. சிதம்பரனார்**

அருள்தரும் அன்னை செண்பகவல்லியுடன் இறைவன் பூவனநாதர் கோவில் கொண்டுள்ள திருபூவனம், திருமங்கை நகர், திருக்களாவனம், திருப்புனன்மலை, பொன்மலை, கோவிற்புரி என்றெல்லாம் பெயர் பெற்ற கோவிற்பட்டி திருத்தலம் மதுரை கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் மதுரையில் இருந்து 96 கி.மீ. தெற்கிலும் திருநெல்வேலியிலிருந்து 59 கி.மீ. வடக்கிலும், மாவட்டத் தலைநகரான தூத்துக்குடியிலிருந்து 60 கி.மீ. வடமேற்கிலும், சங்கரன்கோவிலிலிருந்து 40 கி.மீ. கிழக்கிலும் அமைந்துள்ளது.

இத்திருத்தலம் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்களான எட்டையபுரம், ஒட்டப்பிடாரம், பாஞ்சாலங்குறிச்சி, மணியாச்சி, கயத்தாறு, கழுகுமலை போன்றவற்றின் அண்மையில் அமைந்துள்ளது.



கோவிற்புரி என்று அழைக்கப் படுகின்ற இத்திருத்தலத்தினை, இங்கிருந்து சுமார் 20 கி.மீ. தூரத்திலுள்ள வெம்பக்கோட்டையை அரசாண்ட செண்பகமன்னன். களாக்காட்டினை வெட்டித் திருத்தி கோவிலும், ஊரும் எழுப்பித்தான் என்கிறது கோவிற்புரித் தலவரலாறு. இவ்வூருக்கு தெற்கே சுமார் 5 கி.மீ. தூரத்திலிருக்கும் மந்தித்தோப்பிலுள்ள சங்கரபாரதி திருமடத்தில் ஒரு செப்புப்பட்டையும் உள்ளது. அது குலசேகரபாண்டியனால் கலி 4131 சாலிவாகன சகாப்தம் 952ல் கொடுக்கப்பட்டது. அதில் இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளதால் இவ்வூர் கலி 4131க்கு முற்பட்டது எனத் தெரிகிறது.

**புராணச்சிறப்பு**

இத்திருத்தலம்மற்றும் இத்திருக்கோவில் பற்றிய புராண வரலாறுகள் பல உள்ளன. சாமி விருதை சிவஞானயோகிகள் இயற்றிய கோவிற்புரி புராணத்தில் இப்புராண வரலாறுகள் தொகுத்துக் கூறப்படுகின்றன. 18 படலங்கள் கொண்ட இந்நூலில் முதல் 16 படலங்களில் இவ்வரலாறுகள் கூறப்பட்டுள்ளன.

**மூர்த்திச் சிறப்பு**

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரமன், இத்திருத்தலத்தில் லிங்கத் திருமேனியுடன், அருள்மிகு பூவனநாதராகப் பக்தர்களுக்கெல்லாம் பேரருள் புரிந்து வருகிறார். பொன்மலை களாக்காட்டிடையே தோன்றிய மூர்த்தி என்பதால் இவருக்குக் களாவனநாதர் என்ற பெயரும் உண்டு. களாக்காட்டிடையே தோன்றிய இறைவனை சங்கன் பதுமன் என்ற இரு பாம்புத் தலைவர்கள் பூவனப்பூக்களால் அர்ச்சித்து வழிபட்டனர். இறைவன் அவர்களுக்கு காட்சி கொடுத்து, பூவனப்பூக்களால் அர்ச்சித்ததால் தன் பெயர் பூவனநாதர் என்று சொல்லியருளினார். அன்று முதல் இத்திருத்தலத்து இறைவன் பூவனநாதர் என்று அழைக்கப் படுகிறார்.

இத்திருத்தல மூர்த்தி பொன்மலை தவ முனிவர்களாலும், அகத்திய மாமுனிவராலும் பூஜிக்கப் பெற்ற சிறப்புடையவர்.

அம்பாள் அருள்தரும் அன்னை, செண்பகவல்லி என்ற பெயரில் 7 அடி உயரத்தில் எழில் கொஞ்சும் தோற்றத்துடன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறாள். இவ்வன்னை, இப்பகுதி மக்களின் வேண்டுதல் தெய்வமாக விளங்குகிறாள். எனவே தான், இத்திருக் கோயிலுக்கு வருகைதரும் அன்பர்கள் முதலில் அம்பாள் சந்நிதியில் வழிபாடு முடித்துவிட்டு

பின்னர் சுவாமி சந்நிதிக்குச் செல்கின்றனர்.

இறைவன் திருவுளப்படி இத்திருக்கோயில் செண்பக மன்னனால் தோற்றுவிக்கப்பட்டதால் இறைவியின் பெயர் செண்பகவல்லி என்றாயிற்று. அருள் தரும் அன்னை செண்பகவல்லி இப்பகுதி மக்களின் கண்கண்ட தெய்வமாய் விளங்குகிறாள். அம்பாள் செண்பகவல்லியின் பெயர் இல்லாத குடும்பங்களே இப்பகுதியில் இல்லை என்னுமளவிற்கு இத்தாயின் சிறப்பு மேலோங்கியிருக்கிறது. இத்திருக்கோவிலில் உண்டியல் திருடியவனை காவல்துறை காவலர் வடிவிலும், மூக்குத்தி திருடியவனை பட்டர் உருவிலும் அம்பாள் வந்து பிடித்துக் கொடுத்தாள் என்பதும், மகளிரிடம் பலநாள் நகைகள் திருடிய பெண், அம்மன் சந்நிதியில் ஒரு வெள்ளிக்கிழமை பிடிபட்டாள் என்பதும் இத்திருத்தலத்து அம்பிகையின் சிறப்புக்கு ஆதாரங்களாகும்.

இத்திருத்தலத்து அம்பிகையை வழிபட்டுவந்தால் தீராத பிணியெல்லாம் தீரும், எல்லா செல்வமும் நம்மை வந்து சேரும், மனம்போல மணவாழ்க்கை அமையும், குறைவிலா குழந்தைப்பேறு கிடைக்கும், வாழ்வில் நல்லவையே நடக்கும், இது கலியுகம் கண்ட உண்மை.

**தீர்த்த சிறப்பு**

சிவனார் மனம் மகிழ தவமியற்றிய பார்வதி தேவிக்கு இறைவன் காட்சி கொடுத்து திருமணம் முடிக்க வந்து சேர்ந்தார். ஈடிணையில்லா ஈசன் திருமணம் காண யாவரும் வந்து ஒருங்கே கயிலை மலையில் கூடியதால் உலகின் வடபுலம் தாழ்ந்து தென்புலம் உயர்ந்தது. அதனைச் சமன் செய்ய இறைவன் ஆணைப்படி தென்புலம் வந்த அகத்தியர் வரும் வழியில் களாமரங்கள் அடர்ந்த பொன்மலையில் தங்கியபோது அங்குள்ள தவமுனிவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க சிவலிங்கத்திற்கு வடபுறம் பொன்மலையில் தொட்டவுடன் தண்ணீர் அருவியாகப் பாய்ந்தது. இத்திருக்குளமே இத்திருத்தலத்தின் சிறப்புமிக்க தீர்த்தமாகும்.

இத்தீர்த்தக்குளத்தை செண்பகமன்னர் ஏற்படுத்தினார் என்பது புராண வரலாறு. இத்தீர்த்தத்தில் நீராடி இத்திருத்தலத்து இறைவனை வழிபட்டால் பாவங்கள் மற்றும் பிணிகள் அகன்று எல்லா பேறுகளும் கிட்டும் என்பது ஆன்றோர் வாக்கு.

**தலவிருட்சம்**

இத்திருக்கோவிலின் தலவிருட்சம் களாமரம் ஆகும். இத்திருத்தலத்து இறைவன், களாமரங்கள் அடர்ந்து பூத்திருந்த காட்டிடையே தோன்றிய லிங்கப்பெருமான் ஆதலால் அவருக்கு களாவனநாதர் என்ற பெயரும் உண்டு. வெம்புக்கோட்டையை ஆண்ட செண்பகமன்னன் களாக்காட்டினை அழித்து இத்திருக்கோவிலை அமைத்தான். இறைவன் களாமரத்தின் அடியில் தோன்றினார் என்பது புராண வரலாறு.

இத்திருத்தலத்து இறைவன் தோன்றிய களாமரமே இத்திருக்கோவிலின் தலவிருட்சமாக, இன்றும் உயிர் மரமாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

சிறப்புமிக்க இந்த தலவிருட்சத்தின் முன்பு மணமாகப்போகும் மணமக்களின் பொருத்தம் பார்க்கும் நிகழ்ச்சி பழங்காலத்தில் நடைபெற்று வந்ததாகத் தெரிகிறது. தற்காலத்தில் மகப்பேறு வேண்டி மகளிர், இதனை வணங்கி இம்மரக்கிளைகளில் தொட்டில் கட்டிப் பயன் பெறுகின்றனர்.

**திருக்கோவில் அமைப்பு**

வரலாறு மற்றும் புராணச் சிறப்புமிக்க இத்திருக்கோவில் கோவில்பட்டி நகரில் மையப்பகுதியில் கிழக்கிலும் வடக்கிலும் மாடவீதிகளுடன் தேரோடும் வீதிகளின் நடுவே நெடிதுயர்ந்த திருமதிலால் சூழப்பெற்று கிழக்கு நோக்கி கம்பீரமாக காட்சி அளிக்கிறது.


இங்கு இறைவன் இறைவியும் தனித்தனி திருக்கோவில்களில் எழுந்தருளி கிழக்கு நோக்கி அருள்பாலிப்பதால் சுவாமி அம்பாள் திருவாயில்கள் தனித்தனியாக உள்ளன. இதில் அம்பாள் திருவாயிலில் சுவாமி அம்பாள் திருமணக் காட்சியுடன் கூடிய எழில் கொஞ்சும் சிறிய சாலைக்கோபுரம் அமைந்துள்ளது.

கோவிற்புரியாம் கோவில்பட்டியில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அன்னை செண்பகவல்லியின் அருள் அளவிடற்கரியது. அதனால்தான் இத்திருக்கோவிலுக்கு வரும் அன்பர்கள், முதலில் அன்னையை வழிபட்டுவிட்டு பின்னர் இறைவனை வழிபடுகின்றனர்.

அம்மன் சந்நிதி குடவரை வாயிலில் தென்புறம் அருள்மிகு பஞ்சமுக விநாயகர் சந்நிதியும், வடபுறம் வள்ளி தெய்வயானை சமேத அருள்மிகு சண்முகர் சந்நிதியும் உள்ளன. குடவரை வாயிலைக் கடந்து செல்லும் போது பரந்த மணிமண்டபத்தைக் காணலாம்.

அருள்தரும் அன்னை செண்பகவல்லி திருக்கோவிலின் முன்புறம் அமைந்துள்ள பலிபீடம் கொடிமரம், நந்தி ஆகியவற்றைக் கடந்து உள்ளே செல்லும் வழியில் அம்பாள் சந்நிதி திருவாயிலின் இருபுறமும் துவார சக்திகள் உள்ளனர். அவற்றின் தென்புறம் அருள்மிகு விநாயகரும், வடபுறம் அருள்மிகு பாலசுப்பிரமணியரும் உள்ளனர். அவர்கள் அனுமதியுடன் அம்மன் சந்நிதிக்குள் நுழைகிறோம். அங்கு மகாமண்டபத்தில் வடகிழக்குமூலையில் பள்ளியறை உள்ளது. மகாமண்டபத்தின் நடுவில் சிறிய நந்தி ஒன்று அம்பாளை நோக்கி அமர்ந்துள்ளது. அர்த்தமண்டப நுழைவாயிலின் தென்புறம் துவார விநாயகரும், வடபுறம் துவார பாலசுப்பிரமணியரும் அமர்ந்துள்ளனர். அர்த்த மண்டபத்தை அடுத்து கருவறையில் அருள்தரும் அன்னை செண்பகவல்லி 7 அடி உயரத்தில் நின்ற கோலத்தில் எழிலுடன் அருள்பாலிக்கின்றாள். அன்னையை வணங்கிவிட்டு தென்புற வாயில் வழியாக வெளியே வருகிறோம். அம்பாள் சந்நிதி கருவறையின் பின்புறம் கிரியா சக்தி பீடமும், வடபுறம்சண்டிகேஸ்வரியின் தனி சந்நிதியும் அமைந்துள்ளன.

அம்பாள் திருக்கோவிலை அடுத்துள்ள தெற்குப் பலிச்சுற்றில், தென்கிழக்கு மூலையில் மடப்பள்ளியும்,



அர்த்தமண்டபத்தை அடுத்த கருவறையில் இறைவன் பூவனநாதர் லிங்கத்திருமேனியுடன் காட்சி அளிக்கிறார். அவன் அருளாலே அவன் தாள் வணங்கி சுவாமி சந்நிதியின் தென்புறவாயில் வழியாக வெளியே வருகிறோம். கருவறையின் தென்புறச்சுவரை ஒட்டி கல்லால மரத்தின் கீழ் அமர்ந்து அருள்பாலிக்கும் தென்முகக் கடவுளாம் அருள்மிகு தெட்சணாமூர்த்தி சந்நிதி உள்ளது. பின்புறச் சுவரில் லிங்கோத்பவரும், வடபுறச்சுவரில் அருள்மிகு துர்க்கை அம்மனும் உள்ளனர். துர்க்கை சந்நிதியின் அருகில் தனிக்கோவிலில் சண்டிகேஸ்வரர் இறைவனை நோக்கி ஆழ்ந்த தவத்தில் உள்ளார்.

அதனை அடுத்து உக்கிராண அறையும் உள்ளன. அதனை அடுத்து, இத்திருக்கோவிலைக் கட்டிய செண்பக மன்னனுக்கு செண்பகராஜா பீடம் என்ற தனிச் சந்நிதி உள்ளது. அடுத்து, அருள்மிகு ஜுரத்தேவர், அறுபத்து மூன்று நாயன்மார்கள் மற்றும் பத்துத் தொகையடியார்கள், ஒரே வரிசையில் வடக்கு நோக்கி உள்ளனர். அதனை அடுத்து கிழக்கு நோக்கி ஒரே வரிசையில் நாகர், விநாயகர், அம்பாள் மற்றும் நந்தியுடன் இரு லிங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. மடப்பள்ளியின் அருகில் தீர்த்தக்கிணறு ஒன்றும் உள்ளது.

மேற்குப் பலிச்சுற்றில் நடுப்பகுதியில் தனியாக அருள்மிகு சனிபகவான் சந்நிதி உள்ளது. அதனை அடுத்து சற்று தூரத்தில் இத்திருத்தலத்திற்கு பெருமை சேர்த்த அகத்தியர் சந்நிதியும் அடுத்து யாகசாலையும் அதனருகில் வடகிழக்கு மூலையில் பைரவர் சந்நிதியும் தெற்கு நோக்கி அமைந்துள்ளன.

பைரவர் சந்நிதிக்கு எதிரில் கிழக்குச் சுவரின் அருகில் நவக்கிரக சந்நிதி உள்ளது. இதனருகில் தான் கிழக்குச் சுவரில் சுவாமி கோவில் நுழைவாயில் உள்ளது. அதன் வடபுறம் சுவரில் சந்திர பகவானும், தென்புறம் சூரிய பகவானும் உள்ளனர். சூரிய பகவானுக்கு முன்புறம் வாயிலுக்கு அருகில் அதிகார நந்தி வடக்கு நோக்கி உள்ளார்.

பலிபீடம் கொடிமரம் பிரதான நந்தி ஆகியவற்றைக் கடந்து சுவாமி சந்நிதி நுழைவாயிலை அடைகிறோம். வாயிலின் இருபுறமும் துவார பாலகர்கள் உள்ளனர். இவற்றிற்குத் தென்புறம் அருள்மிகு விநாயகரும், வடபுறம் அருள்மிகு பாலசுப்பிரமணியரும் உள்ளனர். அவர்கள் அனுமதியுடன் மகாமண்டபத்தினுள் நுழைகிறோம். அங்கு தெற்கு நோக்கி அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத நடராஜர் தனி சந்நிதியில் உள்ளார். மகா மண்டபத்தின் நடுவில், கருவறையில் உள்ள இறைவனை நோக்கியபடியே சிறிய நந்தி அமர்ந்துள்ளார். அர்த்தமண்டப நுழைவாயிலின் தென்புறம் துவார விநாயகரும், வடபுறம் துவார பாலசுப்பிரமணியரும் உள்ளனர். ஒடுங்கிய

**கலைக்கூடமாய்த் திருக்கோவில்**

இத்திருக்கோவில், அமைப்பில் ஒரு கலைக்கூடமாய்த் திகழ்கிறது.

அம்பாள் திருவாயிலின் மேல் அழகிய கலைச்சிறப்பு மிக்க சிறிய சாலைக்கோபுரம் ஒன்று அமைந்துள்ளது. அம்பாள் திருக்கோபுரத்தை அடுத்துள்ள முன்மண்டபத்தில் நான்கு வரிசைகளாக 28 கல்தூண்களும், அம்மன் சந்நிதியின் முன்புள்ள கொடிமர மண்டபத்தில் 43 கல்தூண்களும் மகாமண்டபத்தில் 4 தூண்களும், சுவாமி சந்நிதியின் முன்மண்டபம் மற்றும் கொடிமர மண்டபத்தில் 35 கல்த்தூண்களும் மகாமண்டபத்தில் 4 தூண்களும் உற்சவர் சந்நிதி கொலுமண்டபத்தில் 6 தூண்களும் உள்ளன. பழமையான இத்தூண்களில் கலைச்சிறப்பு மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க பல சிற்பங்களும், கல்வெட்டுக்களும் உள்ளன.

சுவாமி சந்நிதியின் மகாமண்டபத்தில் உத்திரங்கள் தென்வடலாகப் போடப்பட்டிருப்பது இத்திருக்கோவில் கட்டிட அமைப்பின் தனிச்சிறப்பாகும். அம்பாள் அக்கினி மூலையை நோக்கி இருப்பதால் அம்பாளின் உக்கிரத்தைக் குறைக்கும் பொருட்டு இவ்வாறு தென்வடலாக போடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கல்தூண்களில் செதுக்கப்பட்டுள்ள பல்வேறு சிற்பங்களும் கலைச்சிறப்புடன் எழிலார்ந்த தோற்றமுடன் அமைந்துள்ளதால் இத்திருக்கோவிலே ஒரு கலைக்கூடமாக காட்சி அளிக்கிறது

**பூஜைகளும் திருவிழாக்களும்**

வைகாசி விசாகம், ஆடிப்பூரம், நவராத்திரி விழா, ஐப்பசி மாதம் 12 நாட்களும் நடைபெறும் திருக்கல்யாண திருவிழா உள்ளிட்ட திருவிழாக்கள் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றன.

இத்திருக்கோவிலில் நடைபெறும் பல்வேறு திருவிழாக்கள் மற்றும் ஏறுபடிகள் தொடர்பான நிகழ்ச்சிகள் பல்வேறு மண்டகப்படி தாரர்களால் மிகச் சிறப்பான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்தகு சீர்மிகு சிறப்புகள் கொண்ட செண்பகவல்லித் தாயாரையும் பூவனநாதரையும் வழிபட்டு தீராத பிணி தீர்ந்து திவ்யங்கள் பெறுவோமாக.

# வேலும் மயிலும் துணை

## கந்தர் அனுபூதி

டாக்டர். சரசுவதி இராமநாதன்

சென்ற இதழ் தொடர்ச்சி...

இனி அடுத்த பாடல்

"முருகன் குமரன் குகன் என்று மொழிந்து
உருகும் செயல்தந் துணர்வென் றருள்வாய்"

என்று தொடங்குகிறது. முருகனென்று, குமரன் என்று, குகன் என்று மொழிந்து உருகும் நிலை வேண்டும். முருகன் அழகானவன், இளமையானவன், செல்வங்களுக்குள் சிறந்தவன், முருகா, முருகா என்று சொல்லி முக்தி நிச்சயம் பண்ணிக் கொள். உன்னிடம் உள்ள ஆசைகளை நீக்கிக் குமரன், குமரன் என்று சொல். உன்னுள் உள்ள குகனை நினைந்து உருகு. வேறொன்றும் நினைக்காமல் முருகனையே நினைப்பது குமரனையே பேசுவது குகப்பெருமானையே பேசி அவன் கட்டளையையே செயல் ஆற்றுவது. நிறைவேற்றுவது என உருகிக் கொண்டிருக்கும் நிலைமை வந்தால் அதற்குப் பெயர்தான் நிறை உணர்வு. ஆண்டவனை அறிவது வேறு, உணர்வது வேறு. சமயவாதிகள் வேறு, சமய அனுபூதிமான்கள் வேறு. ஒரு ஊரில் ஒரு பெரிய சைவர். ஒரு பெரிய வைணவர். வைணவர் சைவருக்கு ஒரு ஓலை கொடுத்தார். ஆதிமூலமே என்று கஜேந்திரன் கூப்பிட்ட உடன் நாராயணர்தான் வந்தான். ஆகவே ஆதிமூலம், நாராயணர்தான் பெரியவர் என்று கூறியிருந்தார்.

அந்த ஓலை வந்த நேரத்தில் வீட்டில் சைவர் இல்லை. ஆனால் அதைப் படித்த சைவரின் மனைவி இதற்கு நானே பதில் சொல்லுகிறேன் என்று கூறி எழுதினார். அதாவது அது ஆதிமூலமே என்று கூப்பிட்டதால் அது ஒரு கால எல்லைக்குள் அடங்கிவிட்டது. ஆனால் சிவபெருமானைக் கூப்பிட வேண்டுமானால் 'அநாதிமூலமே' என்று கூப்பிட்டால் சிவபெருமான் வந்திருப்பார் என்றாளாம். இப்படி பேதம் பேசாமல் எல்லோரும் ஒன்றுபட வேண்டும். அத்தனை சமயங்களும் ஒன்றுபட வேண்டும். "ஒன்று என்றிரு: தெய்வம் உண்டு என்றிரு" என்பதே அருளாளர்களின் உபதேசம்.



முருகன், குமரன், குகன் என்று மொழிந்து உருகும் செயல் ஆண்டவனை எளிதில் பிடிக்கும். இராமனிருக்கும் இடத்திற்கு விபீஷணன் வந்தான். கடல் தாண்டி வந்தான். விபீஷணன் வந்த தூரம் குறைவு விபீஷணன் பாசத்தை விட்டுவிட்டு சாகரத்தை கடந்து வந்தான். அதுதான் சரணாகதி. ஆஞ்சநேயர் பேச்சைக் கேட்டே விபீஷணன் இராமனிடம் சரணம் அடைந்தான். "குகனோடும் ஐவரானோம் முன்பு: பின்பு சுக்ரீவனோடு அறுவரானோம், நின்னோடு எழுவரானோம்" என்று இராமன் கூறினான். விபீஷணன் ஞானவான். குகன் தான் இராமனை எளிதில் பிடித்தான். பக்தி தான் காரணம். குகனை மாத்திரம் இலட்சுமணன் சந்தேகப்படவில்லை. இவன் என் தாயைக் காட்டிலும் சிறந்தவன் என்றான். தகப்பன் அறிவைப் பார்ப்பான். தாய் வயிற்றைப் பார்ப்பாள். இராமனுக்குப் பசிக்கும் என்று தாய் போல் தேனும் மீனும் குகன் கொண்டு வந்ததால் தாயன்பும், அதிக பக்தியும் உடையவன் இவன் அறிவால் ஆராய்ச்சி செய்திருந்தால் மீனைக் கொண்டு வந்திருக்க மாட்டான். ஆனால் அவன் அன்பையே பிரதானமாகக் கொண்டு தேனும் மீனும் கொண்டு வந்ததால் அவனது பக்தியில் இராமனும் மகிழ்ந்தான். பக்தி வேறு கண்ணப்பன் வேறு அல்ல. கண்ணப்பனே பக்திதான். கண்ணப்பனே அன்புதான். கண்ணப்பன் பக்தியை, கண்ணப்பனின் கண்ணைக் கொண்டே சிவபெருமான் பார்த்தான். அதுபோல் கங்கை வேடன் குகனும் அன்புமயம். இராமன் குகனை அறிமுகப்படுத்தும் போது தாயைக் காட்டிலும் உயிர்க்கு நல்லான் என்றான். அன்பே ஆண்டவனை நம்வசப் படுத்த வல்லது. அன்பு வலையிற் படுவோன் அவன். முருகன் என்று சொல்லி, குமரன் என்று சொல்லி, குகன் என்று கூறி உருகிப் போ. 'முருகா நீதானப்பா கொடுக்க வேண்டும்' என்று கேட்டால் உடனடியாக முருகனுடைய திருவடி கிடைக்கும்.

சிவனும், பிற தேவரும், முனிவரும் பூவுலகும் பணியும் குருநாதன் முருகனே! நம் குறையெல்லாம்

போக ஒரு நிறைவு இருக்கிறதே. அதுதான் ஆண்டவன். முருகப்பெருமானுக்கே உரிய தனிச்சிறப்பு தகப்பனாகிய சிவபெருமானுக்கே உபதேசம் செய்தவன். கலைஞர்களுக்குள் சிறந்த கலைஞர் பிரம்மா. பிரம்மா படைப்பில் எத்தனை வித்தியாசம். வேறுபாடுகளை முகத்தில் தான் எத்தனை வைத்துள்ளான்.

முருகப் பெருமான் அவனிடம் போய் பிரணவத்தின் பொருள் என்ன, என்று கேட்டான். அவன் தெரியாது என்று கூறினான். ஆகவே பிரம்மாவைச் சிறையில் போட்டான். ஆகவே படைக்கும் செயலை முருகனே செய்தான். படைப்பு எல்லாமே ஒரு மாதிரி அமைந்து விட்டது. சிவபெருமான் ஏன் அவ்வாறு செய்தாய்? என வினவப் 'பிரம்மாவுக்கு பிரணவத்தின் பொருள் தெரியவில்லை. ஆகவே அவரைச் சிறையில் தள்ளினேன்' என்றான் முருகன். உடனே, சிவபெருமான், 'உனக்குப் பிரணவத்தின் பொருள் தெரியுமா?' என்று கேட்டார். முருகப் பெருமான் உடனே, "எனக்கு தெரியும் ஆனால் கேட்கிற விதத்தில் கேட்டால் நான் சொல்வேன்" என்று கூறினார். 'சரி' என்று சொல்லி முருகப் பெருமானை சிவபெருமான் தன் தோளில் ஏற்றி வைத்துக் கொண்டு பிரணவத்தின் பொருள் கேட்டார். முருகன் சிவபெருமானுக்கு தெரியாததையா சொன்னார்: இல்லை! அவர் தெரியாதது போல் உபதேசம் கேட்டது அழகு தகப்பன்சாமி முருகன்.

சிவபெருமான் ஐந்து முகங்கள் உடையவன் முருகப்பெருமான் 6 முகங்கள் உடையவர். சிவபெருமான் நாமம் 5 அட்சரம். முருகப்பெருமான் மந்திரம் 6 அட்சரம். அந்தக் குருதான் முருகப் பெருமான். எல்லாருக்கும் குருவாக இருப்பதற்குத் தகுந்தவன் முருகப்பெருமான்தான். 'சிவனார் மனம் குளிர உபதேச மந்திரம் இரு செவி மீதிலும் பகர்செய் குருநாதா' என்பார் திருப்புகழில்! எல்லாம் தெரிந்த சிவபெருமானுக்கு உபதேசம் செய்ய வேண்டிய தேவையில்லையே. ஆனால் எனக்கு அல்லவா நீ உபதேசம் செய்ய வேண்டும் என்று அருணகிரிநாதர் கேட்டார். நாதகுமரா நம என்றார் சிவபெருமான். முருகனை நாதா என்று அழைத்தார், சுவாமிநாதன் ஆனார் முருகன். எப்போதும் சந்தோஷமாக இருப்பவருக்கு, சோம்பேறிக்கு, மானம் பார்ப்பவனுக்கு எதைக் கண்டாலும் ஆசை கொள்பவனுக்குப் பாடம் சொல்லாதே என்றது நன்னூல்.

"குமராய நம" "நமக்குமாராய" என்பதுதான் ஆறெழுத்து மந்திரம் 'குமராயநம' என்று சொல்லி மந்திர உபதேசம் கேட்டார். பெரியவர் சிவபெருமான்! என்ன பொருள்? 'வேதா முதல் விண்ணவர் ஆடும் மலர்ப்பாதா' பிரம்மதேவர் முதல் எல்லா தேவர்களும் உன்னை மிகவும் தூக்கி சொல்கிறார்களே அப்படி பெரியவனாகிய நீ எனக்கு அதைச் சொல்ல வேண்டும்.

நீ மாத்திரம் சொல்லாவிட்டால் நான் உன் குட்டை உடைத்து விடுவேன் என்று அருணகிரிநாதர் கூறுகிறார். பிரம்மா முதல் எல்லா தேவர்களும் உன் திருவடியை தலையிலே சூட்டிக் கொள்கிறார்கள். ஆனால் நீயோ வள்ளிப் பெருமாட்டியின் பதத்தை சூட்டிக் கொள்கிறாய் என்று கூறுகிறார். பூலோகத்தில் இருக்கிற எல்லோரும் தாங்கள் வாழ்வதற்காக முருகப்பெருமானாகிய உன்னை வணங்குவார்கள். ஆண்டவருக்குரிய 8 குணங்களில் ஒன்று சர்வ சுதந்திரத்தோடு இருத்தல். கட்டுப்பாடு இல்லாமல் நாம் வாழ முடியாது பசி, சோர்வு தூக்கம் இவையே கட்டுப்பாடுகள். கட்டுப்பாடு இல்லாத வாழ்க்கையே கிடையாது.

இறைவன் இயல்பிலேயே பாசங்கள் அற்றவன், முற்றும் உணர்ந்தவன் ஆண்டவன். நாம் எதுவும் அறியாதவர்கள். சில பேர்கள் சொல்வார்கள். எனக்கு கல்யாணம் ஆகி 35 வருடம் ஆகிறது. இன்றும் என் மனைவியை முழுதும் அறிந்து கொள்ள முடியவில்லை என்று கூறுகிறார்கள். இது எதனால்? நிறைய நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை உள்ளன. முதலில் இயற்கை உணர்வு: அடுத்த குணம் செயற்கை உணர்வு! மறதி அதிகம். உணர்வுகளைக் கடந்தநிலை பக்குவம்.

காரணமில்லாமல் அருள் செய்வது இறைவனின் குணம். எந்த விதக் காரணமும் இல்லாமல் ஆண்டவனின் அருள் பொழிந்து கொண்டு இருக்கிறது.

ஆனால் காரணமில்லாமல் நமது அன்பு பாய்வதில்லை: அருள் பாய்வதில்லை: ஆண்டவன் அருள் எல்லா இடத்திலும் பாய்ந்து கொண்டிருக்கிறது. நாம் நம்முடைய மனத்தை உலகத்தை நோக்கி கவிழ்த்து வைத்திருக்கிறோம். ஆனால் ஞானிகள் மனதை நிமிர்த்தி வைத்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஆண்டவனுடைய அருள் கிடைக்கிறது. முருகப்பெருமானைப் போற்றுகிறார்கள். முருகனை நினைத்து பக்தியோடு மொழிந்து உருகினால் எல்லா அருளும் கிடைக்கும். ஆகவே குருபுங்கவ! என் குண பஞ்சரனே! என்பார்.

- அடுத்த இதழில் தொடரும்...

# பதினோராம் திருமுறையின் பக்திப் பனுவல்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி....

சிவனது திருமுகத்திற்கு அடுத்து, காரைக்கால் அம்மையாரின் மூன்று நூல்கள் உள்ளன. அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை, திருவாலங்காட்டுப் பதிகம் என்ற மூன்றும் திருமுறைகளுக்கெல்லாம் முந்திய நூல்களாகும். இவைகளைப் போல, சேரமான் பெருமான் பாடிய பொன்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞான உலா என்ற மூன்றும் காலப் பழமையுடையதாகும். இவ்வாறே காலப்பழமை கொண்டது ஐயடிகள் காடவர்கோன் நாயனார் பாடிய ஷேத்திரவெண்பா நூலாகும். இவைகளுக்கெல்லாம் முந்தியதாகக் கருதப்படும் திருமுருகாற்றுப்படை பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது. இதைப் பாடியவர் நக்கீரர். நக்கீரர் என்ற பெயர் ஒற்றுமை கருதிப் பின்னாளில் வாழ்ந்த நக்கீரரால் பாடப்பட்ட நூல்களும் காலத்தால் பிந்திய பட்டினத்தார், அதிரா அடிகள், இளம்பெருமான் அடிகள் போன்றோரின் நூல்களும் இப்பதினோராம் திருமுறையில் தொகுக்கப்பட்டுள்ளன. இப்பொதுவான தொகுப்பிற்கு மேலாகச் சிறப்பாகத் திருமுறைகளையே தொகுத்தவரான நம்பியாண்டார் நம்பி என்பவரின் நூல்களும் சேர்ந்த நிலையில் இப்பதினோராம் திருமுறை மொத்தம் நாற்பது பனுவல்களைக் கொண்டதாகத் தனிச்சிறப்புடன் திகழ்கிறது.

இந்நாற்பது பனுவல்களில் சிவனைப் பற்றியவை 25, விநாயகர் பற்றியவை 3, முருகன் பற்றியது 1, அடியார்களைப் பற்றியவை 11. இப்படியாக அமைந்த பதினோராம் திருமுறைப் பனுவல்களை ஒட்டுமொத்தமாக உணர்ந்தால் அவற்றின் பாடுபொருள் பெரும்பாலும் நாயக நாயகி பாவனையில் அமைந்துள்ளதை உணரலாம். இவைகளுள் காரைக்காலம்மையாரின் பாடல்கள் மட்டும் சிவபெருமானை நேரில் அனுபவிப்பதாக உள்ளன.

திருமுறை பாடிய ஆசிரியர்களுள் அம்மையார் மட்டுமே பெண்பாற்புலவர், அவரின் வாழ்க்கை அனுபவம் அற்புத அந்தாதியாக மலர்ந்தது. இளமை தொட்டே ஆராத காதலுடன் ஆண்டவனைத் தொழுததாக அந்தாதிப் பாடலைத் தொடங்குகிறார். **"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல், சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்"** (1) என்றவர் **"பேயாய நற்கணத்தில் ஒன்றாய நாம்"** (86) எனத் தம் பேய் உருவ வாழ்வைப் பதிவு செய்யும் அற்புதத்தை அந்தாதியால் உணரலாம்.


மாங்கனியால் தமக்கு வந்த சோதனையில் தான்பட்ட துயரைக்கண்டு இறைவன் பொறுத்திராது சொந்த அனுபவத்தைப் பொதுவாகக் கூறுவார்போல அம்மையார் திருவிரட்டை மணிமாலையில்

**"பிரானென்று தன்னைப்பன் னாள்பர**
**வித்தொழு வாரிடர்கண்டு**
**இரானென்ன நிற்கின்ற ஈசன்கண்டீர்"** (3)

எனக் கூறுகிறார்.

அந்தாதிக்கும் இரட்டை மணிமாலைக்கும் மேலானது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம். இது பதினோரு பாடல்களாக இரண்டு பதிகம் உள்ள நூல். இந்நூல்தான் ஞானசம்பந்தருக்குப் பண்முறை உணர்த்திய தெய்வாம்சம் மிக்கதாகக் கருதி நம்பியாண்டார் நம்பிகள் திருமுறை தொகுக்கக் காரணமாக இருந்தது. 'கொங்கைதிரங்கி' எனத் தொடங்கும் பதிகம், தன் அனுபவமான பெண்பேயை நினைவு கூர்ந்த வகையில் **"நட்டபாடை"ப்** பண்ணில் பாடப்பட்டது. **'எட்டிஇலவம்'** எனத் தொடங்கும் பதிகம் **"இந்தளம்"** பண்ணில் அமைந்தது. இவ்விரண்டை ஆதாரமாகக் கொண்டு சம்பந்தர் பாடலில் நட்டபாடையாக இயல்பாய் அமைந்த தோடுடைய செவியன் என்ற பதிகத்தைத் திருமுறையின் தொடக்கமாகவும் இந்தளம் பண்கொண்ட பதிகத் தொடக்கத்தை இரண்டாந்திருமுறையாகவும் நம்பியாண்டார் தொகுத்தார். இதனால் அம்மையாரின் பதிகம் மூத்த திருப்பதிகம் என்ற காலப்பழமையான பெயரைப் பெற்றது.

மேலும் பதிகத்தின் இறுதியான பதினோராம்பாடல் மேற்கண்ட பத்தும் பாடிய காரைக்கால் பதிகத்தைப் பாடுவோர் பலன்




தமிழாகரர்
தெ. முருகசாமி, புதுச்சேரி

பெறுவர் என்று கூறும் குறிப்பைப் போலவே ஞானசம்பந்தர் பாடல்கள் அமைந்திருந்ததால் சம்பந்தரின் தேவாரம் திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்க உதவியாக இருந்தது என்பது குறிப்பிடத் தகுந்ததாகும். இச்சிறப்போடு தேவாரம் பாடிய மூவரும் அம்மையாரைக் குறித்துப் பாடுவதால் திருமுறைத் தாயாகக் காரைக்காலம்மையார் உள்ளார் என்பதும் குறிப்பிடத் தகுந்ததாகும். அதனால் தான் அறுபத்து மூவரில் அம்மையார் மட்டுமே அமர்ந்த கோலமாய் காட்சி தருவதைச் சிவாலயங்களில் காணலாம்.


சைவ சமய வழிபாட்டில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன மிக முக்கியமானதாகும். இவற்றை வெளிப்படுத்திப் பாடிய பெருமை ஐயடிகள் காடவர்கோன் என்ற பல்லவ அரசராய் ஆண்ட அருளாளரையே சாரும். காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்றபடி நிலையாமையான வாழ்வில் நிலைத்ததை நாடுவீர் என மக்களைத் தலயாத்திரைக்குத் தூண்டும் நூலாக ஷேத்திரத் திருவெண்பா இப்பதினோராம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது.

**"குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல்**
**பயிலப் புகாமுன்னம் நெஞ்சே! - மயிலைத்**
**திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாகில்**
**இருப்பின்னை அங்காந் திளைத்து"**


குயில்போல் கருத்த தலைமயிருள்ள இளமை, கொக்குபோல் வெள்ளைநிறமாய் முதுமையடைந்து இருமல் போன்ற பிணியால் துன்புறும் காலம் வாராத நிலையில் மயிலாப்பூர் இறைவனைச் சிந்தித்து வாழ்ந்தால் வீடுபேற்றை இருப்பாய்க் கொண்டு மகிழ்ந்து வாழலாம் என்கிறார் காடவர்கோன். இதுபோல் பல பாடல்கள் முன்னறிவிப்பைச் செய்கின்றன.

சேரமான் பெருமானின் பொன்வண்ணத் தந்தாதியும், திருவாரூர் மும்மணிக்கோவையும், திருக்கயிலாய ஞான உலாவும், பாடிய ஊராலும் யாப்பாலும் அடிவரையறையாலும் வேறு வேறாக இருந்தாலும் அகப்பொருள் மரபில் பாடப்பட்ட வகையில் ஒற்றுமையுடை நூல்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அழகிய பொன்மேனி கொண்ட தில்லை நடராசனை அடையப் பெறாததால் பொன்னிறப் பசலை கொண்ட சேரமானாகிய தலைவி, தானும் தலைவனும் பொன்னிறத்தினரே என ஏக்கமுற்றுப் புலம்புவதாகத் தொடங்கிப் பாடப்பட்டது பொன்வண்ணத் தந்தாதி, சிற்றின்ப இல்லற வாழ்வே பேரின்ப நுகர்ச்சிக்கு வாயில் என்பதைத் திருவாரூர் மும்மணிக்கோவை உணர்த்துகிறது. இறைவன் தலைவன்: அவனது அருளுக்கு ஏங்கும் மன்னுயிர்கள் அவனை அடையத் துடிக்கும் காதல் மகளிர் என்பதாகக் கற்பித்துக் கொண்டு பாடப்பட்டது திருக்கயிலை ஞான உலா.

நக்கீர தேவ நாயனார் என்பவர் பாடியதாகப் பத்து நூல்கள் பதினோராம் திருமுறையை அலங்கரிக்கின்றன. இவற்றுள் சங்கப் புலவரான நக்கீரர் பாடிய முருகனைப் பற்றிய திருமுருகாற்றுப்படைக்கும் ஏனைய பனுவல்களுக்கும் பொருளாலும் சொற்பிரயோகத்தாலும் வேறுபாடுகள் உள்ளதால் பின்னாளில் நக்கீரர் பெயர் கொண்டவரால் பாடப்பட்டவற்றைத் தொகுப்பில் சேர்த்துக் கொண்டனர் எனலாம். அன்புவழிபாட்டு நெறியே தமிழர் வழிபாடு என்பதைத் திருமுருகாற்றுப்படை உணர்த்தும். தருமிக்குப் பொற்கிழி கொடுத்த திருவிளையாடல் தொடர்ச்சியில் பாடப்பட்டது.



1. திருவாலவாயுடையார் 2. காரைக்காலம்மையார் 3. ஐயடிகள்காடவர்கோன் நாயனார் 4. சேரமான் பெருமான் நாயனார்5. நக்கீரதேவ நாயனார் 6. கல்லாடதேவ நாயனார்




**7. கபிலதேவ நாயனார் 8. பரணதேவ நாயனார் 9. இளம்பெருமான் அடிகள் 10. அதிராவடிகள் 11. பட்டினத்துப்பிள்ளையார் 12. நம்பியாண்டார் நம்பி**

'கயிலைபாதி காளத்திபாதி' என்னும் நூல். இறைவனின் அறக்கருணை மறக்கருணை பற்றியது கோபப் பிரசாதம். சித்திரக்கவியானது "திருஎழுகூற்றிருக்கை". இது எண்ணலங்காரச் சிறப்பைக் கொண்ட நூல். பண்ணிசைப் பாட்டாலானது பெருந்தேவபாணி, மலைவளத்தையும் இறையருள் வளத்தையும் இயற்கையோடு சார்த்திக் கூறுவது "திருஈங்கோய்" மலை எழுபது என்னும் நூலாகும். இறைவனைக் காதலித்த நக்கீரத் தலைவியின் அகவெளிப்பாட்டைத் "திருவலஞ்சுழி மும்மணிக்கோவை" உணர்த்துகிறது. கார்காலத்தை இறைவனது கண்டத்தோடு உவமித்துப் பாடியது "கார்எட்டு", காலந்தோறும் உயிர்களுக்கருளும் சிவனது அருளிச் செயல்களின் பட்டியலாக அமைந்தது "போற்றித் திருக்கலிவெண்பா". அன்பின் திருவுருவான கண்ணப்பரை அனுபவித்தது "திருக்கண்ணப்ப தேவர் மறம்". 'நோக்கிற்கு நக்கீரர்' எனப் பழம்பாடல் ஒன்று நக்கீரரைப் போற்றியபடிப் பன்முகநோக்கமைந்த பாடல்களாகத் தந்தவை இப்பதினோராம் திருமுறைக்குப் பக்திச் செழுமையைக் கூட்டுகின்றன எனலாம்.

கல்லாட தேவர் பாடிய "திருக்கண்ணப்ப தேவர்" மறம் என்ற ஒருநூல் மட்டும் 11ஆம் திருமுறையில் உள்ளது. மறம் என்பது வீரம். புறப்பாடலில் மறம் என்பது ஒரு துறைக்குப் பெயர் கண்ணிடந்து அப்பிய வீரமே வீரம் என்ற குறிப்பை இந்நூல் தருகிறது. இத்தலைப்பில் நக்கீரதேவர் நீண்டதாகப் பாட கல்லாடரோ சுருங்கியதாகப் பாடுகிறார். நக்கீரர், கண்ணப்பன் என வெளிப்படையாகப் பெயரைச் சுட்டியது போலக் கல்லாடர் கூறாமல் காட்டுவாழ்க்கையின் சூழலால் பண்புகளைச் சுட்டியவாறே கண்ணப்பன் நினைவு கூறுகிறார் என்பது இந்நூல் கூறும் புதுமையாகும்.

விநாயகரைப் பற்றிய ஒருநூலும் சிவபெருமானைப் பற்றிய இரண்டு நூலும் பாடியவர் கபிலதேவ நாயனார். "திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்" என்னும் பலரும் அறிந்த பாடல்களைக் கொண்டது "மூத்த நாயனார் திருவிரட்டை மணி மாலையாகும்". ஆதியும் அந்தமும் இல்லாதவன் சிவன் என்பது பற்றிச் சிவபெருமான் திருவிரட்டைமணிமாலையும் சிவபெருமான் திருவந்தாதியும் புகழ்ந்து கூறுகின்றன.

சிவபெருமான் திருவந்தாதியாக மற்றொரு நூலைப் பாடியவர் பரணதேவ நாயனார். வழக்கமான பரம்பொருள் பற்றிய செய்திகள் கூறப்பட்டாலும் நெஞ்சே, பிறவி நோய் போக திருக்கழிப்பாலையோ, வினையகல காரோணம்போ என நெஞ்சுக்குக் கூறுவார்போல ஆன்மாவைத் தலயாத்திரைக்கும் தூண்டும் நூலாக உள்ளது இந்தச் "சிவபெருமான்" அந்தாதியாகும். இவ்வாறே "சிவபெருமான் திருமும்மணிக்கோவை" என்ற ஒருநூலைப் பாடியவர் இளம்பெருமான் அடிகள் ஆவார். சிவபெருமானின் இயல்புகள் முரண்பட்டவை என்பதை இந்நூல் சுட்டுகிறது. சடையில் நீர் இருந்தாலும் அச்சடை நெருப்பானது. கண்டத்தில் நஞ்சு இருந்தாலும் காண்பார்க்கு அமுது

போன்றது. அவன் திருமேனி சுடரொளியான அனலானாலும் பார்க்கக் குளிர்ச்சியானது என்பன போன்ற முரண்பாட்டால் இவனை அனுபவிக்கத் தூண்டுவது இந்த மும்மணிக் கோவையாகும்.

விநாயகரைப் பற்றியதாகவே அதிரா அடிகள் செய்த "மூத்த பிள்ளையார் திருமும் மணிக்கோவை" என்ற ஒருநூல் பதினோராம் திருமுறையில் உள்ளது. பிள்ளைப் பருவத்தில் சப்பாணி கொட்டிப் பெற்றோரை மகிழ்விக்கும் சிறப்பை விநாயகர் மீது ஏற்றிப் பாடுவதாக அமைந்தது இம்மும்மணிக் கோவையாகும்.

முற்றுந்துறந்தவர் என்பதற்குச் சான்றாகத் திகழும் பட்டினத்தாரின் ஐந்து நூல்கள் 11ஆம் திருமுறையின் புகழைப் பறைசாற்றுவனவாக உள்ளன. இவற்றுள் அகப்பொருளாகப் பாடப்பெற்ற "திருவேகம்பமுடையார் திருவந்தாதியைத்" தவிர்த்த நான்கு நூல்கள் தில்லை, சீர்காழி, திருவிடைமருதூர், திருவொற்றியூர் ஈசன் மீது பக்தி கொள்ளத் தூண்டும் பனுவல்களாக உள்ளன. பட்டினத்தாரில் மூன்று பேர் உண்டு. 10,14,17 ஆகிய நூற்றாண்டில் இவர்கள் வாழ்ந்துள்ளனர். காலப் பழமையான 10ஆம் நூற்றாண்டினரான பட்டினத்தார் பாடல்களே 11ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டன. இப்பாடல்களில் உருவக உவமையணிகளும், உமையொரு பாகராகக் காட்டப்பெறும் இறைவனது திருமேனிப் பொலிவும் சிறப்பாகக் கற்கத் தக்கவையாக உள்ளன. குறிப்பாக முயற்சியால் கிட்டாதவை என உலகில் எவையுமே இல்லை எனக்கூறும் தத்துவ வரியாக: “உழப்பின் வாரா உறுதிகள் உளவோ” என்பதை அருட்பிரசாதமாகத் தந்தவர் பட்டினத்தார் என்ற பதிவைக் கொண்டது இவரது பாடலாகும்.

இறுதியாக நம்பியாண்டார் நம்பியின் ஒன்பது நூல்கள் 11ஆம் திருமுறையின் பிற்பகுதியைச் சிறப்பிக்கின்றன. திருமுறைகளை மாமன்னன் இராசராசன் கட்டளையால் திருமுறைப்படி தொகுத்தவர் நம்பியாண்டார் ஆவார். திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாரை வழிபட்டு வந்த புண்ணியத்தால் திருமுறைகளைத் தொகுக்கும் பேறுகிட்டியதால் அப்பிள்ளையார் மீது "திருநாரையூர் விநாயகர் திருஇரட்டை மணிமாலை" பாடிப் பரவினார். திருமுறை தொகுத்த சிறப்பால் அத்திருமுறையில் பாடப்பட்டுள்ள இறையடியார்களைச் சுந்தரர் வழியில் திருத்தொண்டர் திருவந்தாதி பாடி அடியார்களைப் பரவினார். திருமுறைக்கெல்லாம் இணையதளமாக இருந்தது தில்லைத் தலம் என்பதால் அத்திருத்தல இறைவனைப் "பண்ணியர் விருத்தம்" என்ற புதுப்பெயரில் பாடிப் பரவினார். அருளாகிய திருவை ஆன்மாக்களுக்குத் தில்லையிலிருந்து இறைவன் பண்ணுகின்றவர் (உருவாக்குகின்றவர்) என்ற குறிப்பில் "கோயில் திருப்பண்ணியர் விருத்தம் எனப் பாடினார் நம்பியாண்டார் நம்பிகள்".

இப்படியாகத் திருமுறைத் தொடர்பில் விநாயகரை, அடியார்களை, தில்லை ஈசனைப் பாடியவர் சம்பந்தர் மீது ஆராக் காதல் கொண்டவராய் "ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி", "திருச்சண்டை விருத்தம்", "திருமும்மணிக் கோவை", "திருவுலாமாலை", "திருத்தொகை" என்ற ஐந்து நூல்கள் பாடிப்பரவினார். இவ்வாறே அப்பரடிகள் மீது திருநாவுக்கரசு தேவர் "திருவேகாதசமாலை" என்ற ஒரு நூலைப் பாடினார். இவ்வாறு ஆண்டவனையும் அடியார்களையும் அனுபவித்துப் பாடும் பனுவல்களைக் கொண்டதாகப் பதினோராம் திருமுறை திகழ்கிறது.

பதினொன்று என்ற எண்ணிக்கைக்கு ஏற்ப இத்திருமுறை பதினோரு சிறப்புக்களைக் கொண்டுள்ளது கவனத்திற்குரியதாகும். 1. சிவனது பாடல் உள்ள திருமுறை என்ற தனிச்சிறப்பு இத்திருமுறைக்கே உண்டு. 2. பாடியவர்களின் எண்ணிக்கை மிகுதியாக உடையது. 3. அறுபத்து மூவரில் காரைக்கால், சேரமான், ஐயடிகள் என்ற மூவர் பாடல்கள் சேர்ந்துள்ளமை. 4. சிவனைத் தவிர விநாயகர், முருகர்பற்றிய தனி நூல்கள் உள்ளமை. 5. ஆண்டவனைப் போல அடியார்களையே ஆண்டவனாகக் கருதி பாடப்பட்ட நூல்கள் சேர்ந்துள்ளமை 6. பெரும்பாலான திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பியின் பாடல்கள் சேர்ந்துள்ளமை. 7. கடைச்சங்க நூலான திருமுருகாற்றுப்படையும் பின்னாளைய நூல்களும் கலந்த கலவையாக இருப்பது. 8. அந்தாதி, உலா, கலம்பகம், கோவை போன்ற சிற்றிலக்கிய வகைகளும் பாசுரம், பதிகம், தொகை போன்ற பிறவகை நூல்களும் சேர்ந்துள்ளமை. 9. ஒரே ஒரு பெண் அடியார் பாடல் உள்ள பெருமை. 10. பெரிய புராணக் கதையோடு திருவிளையாடல் புராணக் கதைக்குறிப்பும் காணப்படும் பாடல்கள் உள்ளமை. 11. மூர்த்தி, தீர்த்தம், தலம் என்ற வகையில் ஊர்ப் பெயர்களைத் தாங்கிய நூல்கள் உள்ளமை. எனவே இத்திருமுறையைப் பாடி ஈசனருள் பெறுவோமோக!.

# சைவமும் தமிழும்


சென்ற இதழ் தொடர்ச்சி...

இடைச்சங்க காலத்தில் தோன்றிய இலக்கண நூல் தொல்காப்பியம். இந்நூல் கி.மு. 700க்கு முற்பட்டது என்பர் ஆய்வாளர். இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. மூன்றாவதாகிய பொருளதிகாரத்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலங்களுக்கும் உரிய கடவுளரைக் குறித்த நூற்பா ஒன்று உள்ளது. அது வருமாறு.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என**
**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"**

இதில் மலையும், மலை சார்ந்த பகுதிகளுமாகிய குறிஞ்சி நிலத் தெய்வமாகச் சேயோன் என்ற சொல்லால் முருகன் குறிக்கப்பட்டுள்ளான். சிவன் பற்றிய நேரடியான பதிவு இதில் இல்லை. நிலத் தெய்வங்களுக்கு மேலான தெய்வம் சிவன் என்பதால், சிவன் பெயர் இங்கே இடம் பெறவில்லை என்று சைவ நூல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**தொல்காப்பியத்தில் வேதக் குறிப்புகள்**



சைவம் - சிவன் பற்றிய நேரடியான குறிப்புகள் தொல்காப்பியத்தில் இல்லை என்றாலும் சைவ சமயத்தில் முதல் நூல்களாகிய வேதங்கள் பற்றிய குறிப்புகள் இந்நூலுள் உள்ளன. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் எழுத்துக்கள் பிறத்தல் தொடர்பான புற நடைகளில், எல்லா எழுத்தும் என்று தொடங்கும் நூற்பாவில்,

**"அளவில் கோடல் அந்தணர் மறைத்தே"**

என்ற தொடர் வருகிறது. இதில் வரும் அந்தணர் மறை என்பது வேதத்தைக் குறிப்பதேயாகும். மேலும் பொருளதிகாரத்தில் காமப்புணர்ச்சி இலக்கணக் குறியீடு உணர்த்தும். இன்பமும் பொருளும் என்று தொடங்கும் நூற்பாவில்.

**"மறையோர் தேஎத்து மன்றல் எட்டு"**

என்ற தொடர் இடம் பெற்றுள்ளது. இங்கேயும் மறை என்ற சொல்லால் வேதமே குறிக்கப்பட்டுள்ளது.

**தொல்காப்பியத்தில் சிவன் - சக்தி**

தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணை இயலுள் பாடாண் திணைக்கு உரிய மரபு கூறும் ஒரு நூற்பா அமைந்துள்ளது. அது,

**"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே"**

என அமைந்துள்ளது. இதில் இடம் பெற்றுள்ள கந்தழி என்ற சொல் சிவனைக் குறித்து வந்துள்ளது என்பர் சில ஆய்வாளர்கள். மேலும், புறத்திணை இயலுள் வெட்சித்துறை உணர்த்தும் ஒரு நூற்பாவில், கொற்றவை பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

**"மறங்கடை கூட்டிய குடிநிலை சிறந்த**
**கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே"**

கொற்றவை நிலை, என்ற தொடரில் சிவசக்தி பேதங்களில் ஒன்றாகிய கொற்றவை குறிக்கப்பட்டுள்ளமை தெளிவாகிறது.

**சங்க நூல்களில் சிவன்**

கடைச் சங்க நூல்கள் என்பன பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுமாகிய பதினெட்டு நூல்களையே குறித்து நிற்கும். முன் குறித்தவாறு சிவன் என்று சொல்லாட்சி இந்நூல்களில் இல்லை. ஆயினும், பிற்காலச் சைவ இலக்கியங்களுள், சிவனுக்கு உரியனவாகக் குறிக்கப்படும். பலவகை இலக்கணங்களோடு ஒத்த தொடர்கள். இந்நூல்களுள் இடம் பெற்றுள்ளன. சில கடவுள் வாழ்த்துப் பாடல்களும் உள்ளன. இவை சங்க காலத்தில் நிலவியிருந்த சிவவழிபாட்டிற்குச் சான்றாக அமைகின்றன.



அவற்றுள் ஒரு சில பாடல்களையும் தொடர்களையும் காணலாம். அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை ஆகிய ஐந்து எட்டுத்தொகை நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிவனைக் குறித்து அமைந்துள்ளன. ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்து, பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பவரால் பாடப் பெற்றுள்ளது.


**"நீலமேனி வாலிழை பாகத்து**
**ஒருவன் இருதாள் நிழற்கீழ்**
**மூவகை உலகும் முகிழ்த்தன"** முறையே

உமையோடு சிவன் ஆடிய கொடு கொட்டி, பாண்டரங்கம், கபாலம் எனப்படும் மூவகைக் கூத்துக்களைக் கலித்தொகைக் கடவுள் வாழ்த்து விரித்துரைக்கிறது. சிவன் அடையாளங்கள் பலவற்றையும் புறநானூற்றுக் கடவுள் வாழ்த்து விளக்கி நிறைகிறது. அகநானூற்று வாழ்த்து,

**"மூவா அமரரும் முனிவரும் பிறரும்**
**யாவரும் அறியாத் தொல்முறை மரபின்**
**வரிகிளர் வயமான் உரிவை தைஇய**
**யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்"**

என, எவராலும் முற்றாக அறியப் படாத சிவன் சிறப்பை எடுத்துரைக்கிறது.

- தொடரும்



செந்தமிழ் வாரிதி.
முனைவர். இரா. செல்வக்கணபதி

# கந்தபுராண நுண்பொருள்
## நினைவலைகள்

சென்ற இதழ் தொடர்ச்சி...

**"அருண கணபண புயக கடிகையில்**

**ஃ ஃ ஃ**


**இமய மாமயில் அம்பை த்ரியம்பகி.....**

**ஃ ஃ ஃ**

**மரகத பக்ஷி குலத்துரகத் திவாகரர்**

**வடிவை உருக்கி வடித்த திருக்கை வேல்"**

கடைசியில் என்ன வந்தது? வேல். அது வெல் என்ற முதல்நிலை நீண்ட தொழிற்பெயர். எல்லாவற்றையும் வெல்லுவது ஞானம். ஆயுதம் அல்ல. அறிவாளிதான் ஐந்து பூதங்களையும் வென்று அடக்குகிறான். வெள்ளத்தை அணை போட்டு நிறுத்துகிறான். அக்கினியைச் சாந்தப்படுத்துகிறான். ஆகவே எல்லாவற்றையும் வெல்லுவது ஞானம். இச்சைதான் வள்ளி அம்மையார். கிரியைதான் தெய்வயானை. உள்ளபடியே இரண்டு பொண்டாட்டி என்று யாரும் நினைக்கக்கூடாது இச்சா சக்தி வள்ளிநாயகி. கிரியாசக்தி தெய்வயானை. ஆகவே கிரியா சக்தி என்பது தெய்வயானை. இடப்பக்கம் இருக்க வேண்டும். வள்ளி எந்தப் பக்கம் இருக்கவேண்டும்? வலப்பக்கம். எல்லாவற்றுக்கும் ஒரு அடையாளம் உண்டல்லவா? திருநீறிட்டால் சைவன். நாமம் தரித்தால் வைஷ்ணவன். சிலுவைக்குறி அணிந்தால் கிறிஸ்துவன். இப்படி அடையாளம் உண்டுமாப் போலே வள்ளிக்கும் தெய்வயானைக்கும் என்ன அடையாளம்? நீலோற்பலம் கையில் இருந்தால் தெய்வயானை. தாமரை இருந்தால் வள்ளி அம்மையார். இன்றைக்கு நூற்றுக்கு நூறு முருகன் படத்தைப் பாருங்கள். வள்ளி கையிலும் தெய்வயானை கையிலும் தாமரையைத் தான் வைத்து எழுதுவார்கள். ஓவியக்காரர்கள். அவர்களுக்குப் படிப்பு கிடையாது. ஏதாவது வைத்து எழுதிவிட வேண்டியது. தெய்வயானை கையிலே நீலோற்பலம் இருந்தால் தெய்வயானை. என்ன காரணம்? சுவாமிக்கு மூன்று கண்கள். இந்த (இடப்) பக்கம் சந்திரன் இருக்கிறான். இந்த (வலப்) பக்கம் சூரியன் இருக்கிறான். இங்கே (நெற்றி நடுவில்) அக்கினி இருக்கிறான். இடக்கண் சந்திரன்: வலக்கண் சூரியன்: இந்த நடுவில் இருப்பது அக்கினி. இந்தக் கண் இப்படி இருக்கும். விருபாக்ஷன். சந்திரனைக் கண்டு மலர்வது நீலோற்பலம். சூரியனைக் கண்டு மலர்வது தாமரை. சுவாமிக்கு எப்பொழுதும் திறந்த கண்கள். 24 மணி நேரமும் திறந்திருக்கும். இமையா நேத்திரங்கள். நமக்குத்தான் கண்கள் மூடுகின்றன. தூங்குகிறோம். சுவாமிக்குத் தூக்கம் கிடையாது. ஆகவே 24 மணி நேரமும் திறந்த விழி. அந்த இடப்பக்கமாயிருக்கிற தெய்வ யானையின் கரத்தில் உள்ள நீலோற்பலத்திலே 24 மணி நேரமும் சந்திர ஒளி பட்டு 24 மணி நேரமும் மலர்ந்திருக்கும். வலப்பக்கம் இருக்கிற வள்ளியம்மையார் கரத்தில் உள்ள தாமரையிலே 24 மணி நேரமும் சூரிய ஒளிபட்டு 24 மணிநேரமும் மலர்ந்திருக்கும். தெய்வயானை கையிலே தாமரை இருந்தால் சந்திர ஒளிபட்டு 24 மணி நேரமும் தாமரை மலராது. (சந்திரனைக் கண்டு தாமரை மலராது) ஆகவே தெய்வயானை கையிலே நீலோற்பலம் இருக்க வேண்டும். வள்ளி அம்மையார் கையிலே தாமரை மலர் இருக்க வேண்டும். இதன் உட்பொருள் என்ன? முருகப் பெருமானை நிஷ்காம்யமாகப் பலாபலன்கள் இல்லாமல் வழிபடும். அடியார்கள் வாழ்வு என்றும் மலர்ந்திருக்கும். கூம்பிப் போகாது. ஒருநாள் உயர்ந்திருக்கும். ஒருநாள் தாழ்ந்திருக்கும். என்று இல்லாமல் என்றும் ஒன்று போல் இருக்கும். சிலபேருக்குத் திடீரென்று பெயர் வரும். பிறகு மறைந்து விடும். அப்படி இல்லாமல் என்றைக்கும் ஒன்று போல் இருக்கும் என்ற தத்துவத்தை விளக்குவது அந்த தெய்வ யானை கரத்திலே மலர்ந்து இருக்கிற நீலோற்பல மலரும், வள்ளி கையிலே மலர்ந்து இருக்கிற தாமரை மலரும். நீங்கள் எல்லோரும் முருகப் பெருமானை நிஷ்காம்யமாக வழிபட்டால் உங்கள் வாழ்வு என்றும் மலர்ந்த வண்ணமாக இருக்கும். ஆகவே வள்ளி என்பது இச்சா சக்தி. தெய்வயானை என்பது கிரியா சக்தி. அவர் கையிலே இருக்கிற வேல் ஞான சக்தி. இந்த மூன்று சக்திகளின் தலைவனாக அந்த சுப்பிரமணி ஒரு மணியாக விளங்குகிறது என்று சொல்லி எல்லோரும் எல்லா நலனும் பெற்று வாழ எம்பெருமானை வாழ்த்தி இந்த அளவிலே இதனை முழுமை செய்கின்றேன்.



**இந்திர ராகிப் பால்மேல் இன்பமுற்**
**றினிது மேவிச்**
**சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி யதனிற்**
**சேர்வர்**
**அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட**
**முனிந்த செவ்வேற்**
**கந்தவேள் புராணந் தன்னைக் காதலித்**
**தோது வோரே.**

- முற்றிற்று

# மங்களம் தரும் மகாலட்சுமி



அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில்
(அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயில்)
பெசன்ட்நகர், சென்னை–90

பிற தெய்வ வழிபாடுகளைப் போலவே மகாலட்சுமியின் வழிபாடும் மிகத் தொன்மையும், பழைமையும் வாய்ந்ததாகும். இலக்குமியின் திருவுருவ வழிபாடு **சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிக காலத்திற்கு முன்பே இருந்து வந்திருக்கிறது எனத் தெரிய வருகிறது. ஹரப்பா இடிபாடுகளில் இலக்குமி உருவம் பொறித்த கற்களும், சிற்பங்களும், சுதை பொம்மைகளும் கிடைத்துள்ளன என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சாஞ்சி ஸ்தூபி, உஜ்ஜைனி நாணயங்கள், மதுரா மாநகரத்து மன்னர்களின் நாணயங்கள், குப்த வம்சத்து மன்னர்களின் நாணயங்கள் ஆகியவற்றில் இலக்குமி உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.** தமிழகத்தை ஆண்ட மாமன்னன் இராஜராஜன் காசுகளில் உள்ள உருவங்கள் மகாலட்சுமியின் உருவமே என வாதிடுவோரும் உண்டு.

### சங்க இலக்கியங்களில்

மேற்கண்ட வரலாற்று ஆதாரங்களில் குறிப்பிட்டுள்ளது போல் தமிழகத்தின் சங்க இலக்கியங்களிலும் இலக்குமி குறித்த விபரங்கள் நிறையவே உள்ளன. பதிற்றுப் பத்து, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை போன்ற பழம்பெரும் நூல்களில் திருமகளும் திருமாலும் சுட்டப்படுகின்றனர். வீட்டுப்படிகளில் நிலையின் மேல் திருமகளின் திருவுருவம் தீட்டி வைக்கப்பட்டதாக நெடுநல்வாடை கூறுகின்றது. மதிற்சுவர்களில் திருமகளின் திருவுருவம் செதுக்கியிருந்ததாக மதுரைக்காஞ்சி குறிக்கின்றது.

பின்னர், வந்த ஆழ்வார்கள் திருமகளின் சிறப்புக்களையும், வழிபாட்டு முறைகளையும் சிறப்பாகக் கூறியுள்ளனர். திருமாலின் திருவருள் பெறுவதற்கு திருமகளின் திருவருளைப் பெறுவது அவசியம் என ஆழ்வார்களும், ஆச்சாரியார்களும் தெரிவிக்கின்றனர்.

வேதாந்த தேசிகர் திருமாலின் திருவருளைப் பெற பெரிய பிராட்டியாராகிய மகாலட்சுமியின் மூலமே விண்ணப்பிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

திருமாலின் திருமார்பை விட்டு நீங்காதவளாக திருமகள் உறைகிறாள். அதனாலேயே அவள் 'திருவுரு' எனவும், 'திருமரு' எனவும், 'ஸ்ரீ வத்சம் ' எனவும் வழங்கப்படுகிறாள்.

சிவனும் திருமகளும் உறையும் கயிலாயத்தில் உள்ள வாயில்களுக்கு ஸ்ரீ துவாரம், லக்ஷ்மி துவாரம், வாருணி துவாரம், கீர்த்தி துவாரம் எனப் பெயர்களாம். சிவன் கோயில்களில் தினமும் செய்யும் பூசையின் தொடக்கத்தில் வாயிற்படியின் மேலுள்ள மகாலட்சுமிக்கு செய்யப்படும் துவார பூஜை மிக

முக்கியமானதாகக் கருதப்படுகிறது. குடமுழுக்கில் அமைக்கப்படும் யாக சாலையில் நாற்புற வாயில்களின் மீது ஸ்ரீ மகாலக்ஷ்மியை அமைத்துச் சிறப்பான பூசைகள் செய்யப்படுகின்றன.

**பௌத்த சமண மதங்கள்**

பொருள் பற்று இல்லாமை, மிகுபொருள் விரும்பாமை ஆகியவற்றை உறுதிப்பாடாகக் கொண்டுள்ள சமண ஆலயங்களில் கூட வாயிலின் மீது கஜலட்சுமி உருவமும், நிலைக் கால்களில் சங்கநிதி, பதுமநிதி ஆகியவையும் அமைக்கப்படுகின்றன. பௌத்த ஆலயங்களிலும் வாயிலின் மீது திருமகள் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

**இல்லங்களில்**

உப்பிலும், சர்க்கரையிலும், வீட்டு முற்றத்தில் சாணத்தால் மெழுகுதலிலும், கோலமிடுதலிலும், வாசம் நிறைந்த பூக்களை வீட்டில் வைக்குமிடத்திலும் லட்சுமி தாண்டவமிடுவதாகக் குறிக்கப்படுகிறது.

இதுபோல் தொடக்க காலந்தொட்டு இன்றுவரை வீட்டிலும், நாட்டிலும் சிறப்புப் பெற்ற மகாலட்சுமிக்கு, தனித்ததொரு கோயில் அமைக்கப்பட வேண்டுமெனக் காஞ்சி மகா பெரியவர் தன் உள்ளக்கிடக்கையை வெளியிட்டார். அதன் அடிப்படையில் பொதுமக்கள் பங்களிப்பால் உருவானதே அஷ்டலட்சுமி திருக்கோயில் எனப்படும் இச்சீர்மிகு மகாலட்சுமி திருக்கோயிலாகும்.

மகாலட்சுமி திருக்கோயில் வங்கக் கடலோரம் சென்னை, பெசன்ட் நகரில் உள்ள ஓடைமாநகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

லட்சுமியின் ரூபங்கள் 16. இந்த 16 ரூபங்களும் சோடச லட்சுமிகள் என அழைக்கப்படுகின்றனர். இந்த 16 உருவங்களும் ஒருமுகப்படுத்தப்பட்டு அஷ்டலட்சுமிகளாக அமைகின்றனர். இவர்கள் அனைவரின் ஏக லட்சுமியாக மகாலட்சுமி விளங்குகிறாள்.

மகாலட்சுமி மகாவிஷ்ணுவுடன் திருமணக் கோலத்தில் காட்சிதரும் வகையில் கருவறை அமைத்து கருவறையின் மேல் அஷ்டாங்க விமானம் என்னும் எட்டுவகை எட்டு அங்கங்கள் கொண்ட (மிகச்சில திருமால் கோயில்களுக்கே உரித்தான) அஷ்டாங்க விமானத்தில் திருமகளின் எட்டு ரூபங்களும் நிறுவப்பட்டு, சென்னையையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் செல்வச் செழிப்போடு வளரச் செய்திருப்பதாக இப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

1. ஆதிலட்சுமி

ஆதி என்பதற்கு முதல் என்பது பொருள். திருப்பாற்கடலைக் கடைந்த போது வெளிவந்த முதல்



இலக்குமி ஆதிலட்சுமி என அழைக்கப்படுகிறாள். இத்திருக்கோயிலின் தரைத்தளத்தில் தெற்குமுகமாக அஷ்டமங்கலப் பொருட்களுடன் கூடிய பீடத்தில் ஆதிலட்சுமி அமர்ந்து அருள்புரிகிறாள்.

2. தான்ய லட்சுமி



தரைத்தளத்தில் மேற்கு நோக்கி அமர்ந்த திருக்கோலத்தில் ஆறு திருக்கரங்களுடன் தானிய நெற்கதிர் மற்றும் கரும்பு உடையவளாய் கஜபீடத்தில் அமர்ந்து அருள்புரிகிறாள்.

3. தைரிய லட்சுமி



மனத்திற்குத் தைரியத்தைத் தருபவள் தைரியலட்சுமி. தைரிய லட்சுமி, மகாலட்சுமி

திருக்கோயிலின் தரைத் தளத்தில், வடக்கு நோக்கி வீற்றிருக்கிறாள்.

வடக்குத் திசை வெற்றித் திசை என்பதினால் தைரியலட்சுமி சன்னதி வடக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது.

**4. சந்தான லட்சுமி**



'சந்தானம்' என்பதற்குக் குழந்தை என்று பொருள். குழந்தை வரத்தை அளிப்பதனால் இவளுக்குச் 'சந்தான லட்சுமி ' என்று பெயர் வந்தது. மற்றச் செல்வங்களை விடச் சிறந்த செல்வம் குழந்தைச் செல்வம் ஆகும். குழல், யாழ் எல்லாவற்றையும் விட இனியது மழலைச்சொல் எனத் திருவள்ளுவர் குறிக்கிறார். அத்தகைய செல்வத்தை அளிப்பவள் சந்தான லட்சுமி.

இத் திருக்கோயிலின் முதல் தளத்தில் தெற்கு முகமாகச் சந்தான லட்சுமி வீற்றிருக்கிறாள். சடையுடன் கிரீடத்தைத் தரித்தபடி வரத, அபயத் திருக்கரங்களுடன் கத்தி, கேடயம் ஆகிய ஆயுதங்களை அணிந்து காட்சி தருகிறாள். இவளது பீடத்தில் இரு கன்னிப் பெண்கள் சாமரம் வீசியும் விளக்கினைக் கையில் ஏந்திய வண்ணமும் நின்று கொண்டிருக்கின்றனர்.

**5. விஜய லட்சுமி**



'விஜயம் ' என்பதற்கு 'வெற்றி ' என்று பொருள். வெற்றியை அருள்பவள் விஜயலட்சுமி. எடுத்த காரியங்களை வெற்றி பெறச் செய்பவள். விஜயலட்சுமிக்கு வெற்றித் திருமகள் என்ற பெயரும் உண்டு.

இத்திருக்கோயிலின் முதல் தளத்தில் மேற்கு முகமாக அன்னப் பறவையின் மீது வீற்றிருக்கிறாள் விஜயலட்சுமி.

**6. வித்யா லட்சுமி**



'வித்யை' என்பதற்கு இங்கு 'கல்வி' என்று பொருள். கல்விச் செல்வத்தை வழங்குவதனால் இவளுக்கு வித்யா லட்சுமி என்று பெயர். இத் திருக்கோயிலில் வித்யா லட்சுமியை சரஸ்வதியாக வழிபடுகின்றனர்.

கலைவாணியையும் லட்சுமியையும் இணைத்து நிற்பவளே வித்யா லட்சுமி . இந்தத் திருமகளால் கல்வியும் வளரும்; செல்வமும் வளரும். கலைவாணி நிறைந்த கல்வியையும் ஆற்றலையும் வித்தைத் திறனையும் அளிப்பாள். வித்தைகளைக் கொண்டு வாழ்வியல் நலன்களைப் பெற வைப்பவள் வித்யா லட்சுமியாகும்.

**7. கஜ லட்சுமி**



'கஜம்' என்றால் யானை என்று பொருள். இருபுறமும் யானைகள் கலசம் ஏந்தித் திருமஞ்சனம் செய்வது போல் அமர்ந்திருப்பதால் கஜலட்சுமி என்ற பெயர் அமைந்தது. கஜலட்சுமியை இராஜலட்சுமி,

ஐஸ்வர்ய லட்சுமி எனவும் அழைப்பர்.

கஜலட்சுமியின் உருவத்தை வீடுகளின் வாசற்படியின் நிலைப் படிகளில் காணலாம்.

இத் திருக்கோயிலின் முதல் தளத்தில் கஜலட்சுமி கிழக்கு நோக்கி வீற்றிருக்கிறாள். ஒரே கல்லினாலான இரண்டு யானைகள் இருபுறமும் துதிக்கையில் கலசம் ஏந்திப் போற்ற, தாமரை மலரின் மீது வீற்றிருக்கிறாள்.

8. தன லட்சுமி



'தனம் ' என்பதற்குச் ' செல்வம் ' என்று பொருள்.

தன லட்சுமி இத் திருக்கோயிலின் இரண்டாவது தளத்தில் கிழக்கு முகம் நோக்கி அமர்ந்திருக்கிறாள்.

## பிற சந்நிதிகள்

மேற்கண்ட அஷ்டலட்சுமிகளுக்கு மட்டுமல்லாமல், அருள்மிகு கருடாழ்வார் சன்னதி, அருள்மிகு தசாவதாரச் சன்னதி, அருள்மிகு கமல விநாயகர் சன்னதி, அருள்மிகு குருவாயூரப்பன் சன்னதி, அருள்மிகு சக்கரத்தாழ்வார் மற்றும் யோக நரசிம்மர் சன்னதி, அருள்மிகு ஆஞ்சநேயர் சன்னதி, அருள்மிகு தன்வந்திரி சன்னதி ஆகிய சன்னதிகளும் இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அருள்புரியும் வகையில் அமைந்துள்ளன.

## நாள் விழாக்கள்

இத்திருக்கோயிலைப் பொறுத்தவரை ஒவ்வொரு செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகள் மற்றும் அஷ்டமி, அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்கள், தமிழ் மற்றும் ஆங்கில மாதப் பிறப்பு தினங்கள் முக்கியமான நாட்களாகக் கருதி பொதுமக்கள் அதிக அளவில் வருகை தருகின்றனர்.

## திருவிழாக்கள்

ஒவ்வோர் ஆண்டும் ஆவணி மாதம் திருப்பவித்ரோத்சவம் 5 நாட்களும், கோகுலாஷ்டமி, 9 நாட்கள் நவராத்திரி, விஜய தசமி வெள்ளி புறப்பாடு, தீபாவளித் திருநாள், திருக்கார்த்திகை, மார்கழி மாதம், வைகுண்ட ஏகாதசி, ஜனவரி புத்தாண்டு, போகி, பொங்கல், காணும் பொங்கல் , தன்வந்திரி ஜெயந்தி, தமிழ்ப்புத்தாண்டு, ஸ்ரீ சுதர்சன ஜெயந்தி, மாசி மகம், புரட்டாசி சனிக்கிழமைகள், வரலட்சுமி நோன்பு ஆகியவை சிறப்பாகக் கொண்டாடப்படும் திருநாட்களாகும்.

இத்திருக்கோயில் ஓம்கார க்ஷேத்திரம் எனவும், அஷ்டாங்க விமானத்துடன் வற்றாத வங்கக் கடலே சமுத்திர புஷ்கரணியாகவும், வில்வ விருட்சம் தலமரமாகவும் கொண்டு பாஞ்சராத்திர ஆகம ஜெயாகியம் பிரிவின்கீழ் பூஜைகள் அர்ச்சனைகள் திருவிழாக்கள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

அஷ்டாங்க விமானத்தில் இலக்குமியின் தோற்றம் இலக்குமி அருள்புரிந்த வரலாறுகள் இலக்குமியைப் போற்றித் துதித்த மகான்கள் ஆகியோரின் திருவுருவங்கள் கொண்டதாக உள்ளது. இத்திருக்கோயிலில் தினமும் ஆறு காலபூஜை நடைபெறுகின்றது.

தென்னிந்தியாவிலேயே அஷ்டலட்சுமிகளுக்கென அமைக்கப்பட்டுள்ள ஒரே கோயில், மிகக் குறிப்பிடக்கூடிய அஷ்டாங்க விமானம் உடைய திருக்கோயில்களில் ஒன்று. எப்போதும் ஓங்காரம் ஒலித்துக் கொண்டிருக்கக்கூடிய வங்கக் கடலைத் தீர்த்தமாக உடைய கோயில்.

நவராத்திரி நாட்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திருக்கோலத்தில் மகாலட்சுமியும் மகாவிஷ்ணுவும் காட்சி தருவதைக் கண்டு இன்புற்றுப் பலன் பெற வேண்டுகிறோம்.




சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு த. பிச்சாண்டி, இ.ஆ.ப. சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் இந்து சமய அறநிலையத் துறை, சென்னை - 600 034. தொலைபேசி எண் : 28334811 / 12 / 13

ஆசிரியர் (கூ.பொ) : ம. தேவேந்திரன், பி.எஸ்ஸி., பி.எல்., துணை ஆணையர்

அச்சிடுவோர் : சக்தி ஸ்கேனர்ஸ் பிரைவேட் லிட்., சென்னை - 86. தொலைபேசி : 23450920 / 28117575


# அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில்

## சோளிங்கர், வேலூர் மாவட்டம்.





வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், சோளிங்கர், அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில் 108 வைணவதிவ்யதேசங்களில் ஒன்றாகவும், தொண்டை நாட்டில் உள்ள 22 திவ்விய தேசங்களில் ஒன்றாகவும், நம்மாழ்வார், பேயாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகிய அருளாளர்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற புகழ் வாய்ந்த திருத்தலமாக விளங்குகிறது. பெருமாளின் பத்து அவதாரங்களில் நான்காவது அவதாரமான நரசிம்ம அவதாரமாக அருள்பாலித்த திருத்தலமாகும்.



விசுவாமித்ர மகரிஷி ஒரு கடிகை (நாழிகை நேரம்) யோகநரசிம்ம பெருமாளை துதித்து அதன் பலனாக பிரம்மரிஷி என்ற பட்டத்தை பெற்றார். ஒரு நாழிகை நேரம் தங்கி இருந்தாலே மோட்சம் தரக்கூடிய திருத்தலம் என்பதால் கடிகாசலம் என பெயர் கொண்டு விளங்குகிறது.

இத்திருக்கோயிலின் பெரியமலை அருள்மிகு யோக நரசிம்மசுவாமி திருக்கோயில் 750 அடி உயரமும் 1305 படிக்கட்டுகளும் உள்ளன. இங்கு யோக நரசிம்மசுவாமியும் அமிர்தபலவல்லித் தாயாரும் தம்மை நாடி வரும் பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர். இத்திருக்கோயிலின் சிறியமலை ஸ்ரீயோக ஆஞ்சநேயசுவாமி திருக்கோயில் 350 அடி உயரத்திலும் 406 படிக்கட்டுகளும் உள்ளன. இங்கு யோக ஆஞ்சநேயர் சங்கு சக்கரஹஸ்தனாக சேவை சாதித்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார். ஸ்ரீயோக நரசிம்மசுவாமியின் உத்சவப் பெருமானான பக்தோசிதப் பெருமாள் திருக்கோயில் சோளிங்கர் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது.

தமிழக அரசின் இந்து சமய அறநிலைய துறையின் பெருமுயற்சியால் இத்திருக்கோயிலுக்கு திருப்பணிகள் செய்து குடமுழுக்கு செய்திட உத்தேசிக்கப்பட்டு தற்போது திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

வயதானவர்கள் மற்றும் உடல்நலம் குன்றியோர் மலை ஏறிச்சென்று யோக நரசிம்மரையும் தாயாரையும் தரிசிப்பதற்காக ரோப்கார் அமைக்கும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளது.

பொதுமக்கள் அனைவரும் தமது வாழ்நாளில் வளம் பெற்று துலங்க நிறைவாக பொருளுதவி வழங்கி பெருமாளின் பேரருள் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

### திருப்பணி நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி

உதவி ஆணையர் / செயல் அலுவலர்
அருள்மிகு லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில்
சோளிங்கர் - 631102.
வாலாஜா வட்டம், வேலூர் மாவட்டம்.

பதிவு எண் : TN/PMG/(CCR)/707/06-08/WPP No.451/06-08



## திருவண்ணாமலை

# அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்

### திருக்கார்த்திகை தீபத்திருவிழா 2007ம் ஆண்டு அழைப்பிதழ்

பஞ்சபூதத் தலங்களில் அக்கினித்தலமான இத்திருக்கோயிலின் திருக்கார்த்திகை தீபத்திருவிழா இவ்வாண்டு 12.11.2007 முதல் 28.11.2007 வரை கீழ்க்கண்ட விரபப்படி வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

| ஆங்கில தேதி | தமிழ் வருடம் மாதம் | தேதி | கிழமை | விழா விபரம் | உற்சவம் வாகனங்கள் விவரம் |
|---|---|---|---|---|---|
| 12.11.2007 | சர்வஜித்து வருடம் ஐப்பசி மற்றும் கார்த்திகைத் திங்கள் | ஐப்பசி 26 | திங்கள் | | ஸ்ரீதுர்க்கையம்மன் உற்சவம் |
| 13.11.2007 | | 27 | செவ்வாய் | | ஸ்ரீபிடாரி அம்மன் உற்சவம் |
| 14.11.2007 | | 28 | பதுன் | | ஸ்ரீவிநாயகர் உற்சவம் |
| 15.11.2007 | | 29 | வியாழன் | 1 | கொடியேற்றம் (காலை 8.05 மணிக்குமேல் 9.05 மணிக்குள் |
| 16.11.2007 | | 30 | வெள்ளி | 2 | வெள்ளி இந்திர விமானம் |
| 17.11.2007 | | கார்த்திகை 1 | சனி | 3 | சிம்மவாகனம், வெள்ளி அன்ன வாகனம் |
| 18.11.2007 | | 2 | ஞாயிறு | 4 | வெள்ளி கற்பக விருட்சம் காமதேனு வாகனம் |
| 19.11.2007 | | 3 | திங்கள் | 5 | வெள்ளி ரிஷப வாகனம் |
| 20.11.2007 | | 4 | செவ்வாய் | 6 | வெள்ளி ரதம் |
| 21.11.2007 | | 5 | புதன் | 7 | மகா ரதம் (காலை 6.05 மணிக்குமேல் 7.05 மணிக்குள் வடம் பிடித்தல்) |
| 22.11.2007 | | 6 | வியாழன் | 8 | மாலை 4.00 மணிக்கு ஸ்ரீபிட்சாண்டவர் உற்சவம், இரவு குதிரை வாகனம் |
| 23.11.2007 | | 7 | வெள்ளி | 9 | கைலாய வாகனம் காமதேனு வாகனம் |
| **24.11.2007** | | **8** | **சனி** | **10** | **காலை 4.00 மணிக்கு பரணி தீபம் மாலை 6.00 மணிக்கு மகா தீபம்** |
| 25.11.2007 | | 9 | ஞாயிறு | தெப்பல் | இரவு ஸ்ரீ சந்திரசேகரர் தெப்பல், ஸ்ரீபெரிய நாயகர் கிரிபிரதஷணம் |
| 26.11.2007 | | 10 | திங்கள் | தெப்பல் | ஸ்ரீபராசக்தி அம்மன் தெப்பல் |
| 27.11.2007 | | 11 | செவ்வாய் | தெப்பல் | ஸ்ரீசுப்பிரமணியர் தெப்பல் |
| 28.11.2007 | | 12 | புதன் | | ஸ்ரீசண்டிகேசுவரர் உற்சவம் |

அனைவரும் இவ்விழாவில் பங்குகொண்டு நினைத்தாலே முக்தி தரும் அண்ணாமலையார் மற்றும் உண்ணாமுலையம்மனின் திருவருள் பெற வேண்டுகிறோம்.

**பி. வாசுநாதன்**, எம்.ஏ., பி.எல்.,
துணை ஆணையர் / செயல் அலுவலர்

**வ. தனுசு**, எம்.எஸ்ஸி.,
தலைவர், அறங்காவலர்குழு

அறங்காவலர்கள்

**பெ. கோவிந்தன், க. மணிவர்மா, அ. பானுமதி, இர. சீனிவாசன்**